CASH FOR GOLD
R-GOLD
Mob: 93457 93457

THE KOVAI HERALD
தி கோவை ஹெரால்டு

CASH FOR GOLD
R-GOLD
Mob: 93457 93457

RNI.Regn.No.TNBIL/2018/76255 | Postal No: CB/154/2024-26 | Kovai / Tirupur | thekovaiherald.co.in | facebook.com/Thekovaiherald
Volume 8 | Issue 37 | English & Tamil Weekly | 15-2-2026 SUNDAY | 8 Pages | Price Rs.5/-

# இருகூர் - போத்தனூர் இருவழிப்பாதை ஆகிறது

## மத்திய அரசு ஒப்புதல்




தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய நகரமாகவும், தென்னிந்தியாவின்முக்கிய தொழில் மையமாகவும் விளங்கும் கோவையில் ரயில் போக்குவரத்தை மேம்படுத்தும் வகையில், இருகூர் போத்தனூர் இடையிலான ஒற்றைப்பாதையை இருவழிப்பாதையாகமாற்ற மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

சுமார் 10.77 கிலோமீட்டர் நீளமுள்ள இந்த திட்டம் ரூ.277.42 கோடி மதிப்பில் செயல்படுத்தப்பட உள்ளது. தற்போது ஒற்றைப்பாதையாக உள்ளதால், ஒரு ரயில் செல்லும் வரை எதிரே வரும் ரயில்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியநிலை உள்ளது. இதனால் பயண நேரம் அதிகரிப்பதுடன், கால அட்டவணைபராமரிப்பிலும் சிக்கல்கள் ஏற்பட்டன.

கேரளாவிற்கான பிரதான இணைப்புப் பாதையாக உள்ள இந்த வழித்தடம் இருவழிப்பாதையாக மாற்றப்பட்டால், கோவை சந்திப்பு ரயில் நிலைய நெரிசல் குறையும்.

மேலும், கேரளா, சென்னை, பெங்களூரு உள்ளிட்ட நகரங்களுக்கு செல்லும் பயணிகள் மற்றும் சரக்கு ரயில்களின் இயக்கம் வேகமடையும் எனஎதிர்பார்க்கப்படுகிறது.

அமிர்த பாரத் திட்டத்தின் கீழ் போத்தனூர் ரயில் நிலையமும் மேம்படுத்தப்பட்டு வருவதால், இத்திட்டம் கோவையின் இரண்டாவது முக்கியரயில்முனையமாக போத்தனூரை உருவாக்க உதவும் என்று கூறப்படுகிறது.

இந்த திட்டத்திற்கு அனுமதி அளித்த மத்திய அரசுக்கு பிரதமர் நரேந்திர மோடி, ரயில்வே அமைச்சர் அஸ்விணி வைஷ்ணவ்மற்றும்மத்திய இணையமைச்சர் எல். முருகன் ஆகியோருக்கு பொதுமக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

# கொழும்புவில் இந்தியா-பாகிஸ்தான் மோதல்

தி கோவை ஹெரால்டு



இரவு 7 மணிக்கு ஆட்டம் தொடக்கம்

டி20 உலககோப்பை தொடரில் கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள இந்தியா, பாகிஸ்தான்போட்டி இன்று (பிப்15) கொழும்புவில் நடைபெறுகிறது. இந்தப் போட்டியில்பாகிஸ்தானை இந்தியஅணிவெல்லும்என முன்னாள் கிரிக்கெட் வீரர் ஹர்பஜன் சிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது குறித்து பேசிய அவர், "இந்தியா நிச்சயம் வெற்றிபெறும்.பாகிஸ்தான் அணியில்உஸ்மான்தாரிக் ஒரு சிறந்த சுழற்பந்து வீச்சாளர் இருக்கிறார். அவரை எச்சரிக்கையுடன் எதிர்கொள்ள வேண்டும். இந்திய அணி பலமானது. அழுத்தம் இல்லாமல் விளையாடி வெற்றியைப் பெறும் என நம்புகிறேன்"

உஸ்மான் தாரிக் டி20 போட்டிகளில் குறைந்த ரன்களைக் கொடுத்து பல விக்கெட்டுகளை எடுத்தபோதும், அவரது பந்துவீச்சு முறை விதிகளுக்குஉட்பட்டதாஎன கேள்விகள் எழுப்பப்பட்டு சர்ச்சைக்குள்ளானது. எனினும் அவருடைய பந்துவீச்சு ஸ்டைலை ஐசிசி 2 முறை சோதித்து, பிரச்சினை இல்லை என அனுமதித்துள்ளது.

மற்றொரு முன்னாள் இந்திய வீரரான நயன் மோங்கியாவும் இந்தியா வெல்லும் என நம்பிக்கை தெரிவித்தார். இது குறித்து பேசிய அவர், "இது சுவாரஸ்யமான போட்டியாக அமையும், இந்தியாவெல்லவேண்டும். இந்தியாவின் பேட்டிங், பந்துவீச்சு, கேப்டனின் தலைமை சிறப்பாக உள்ளது. கிரிக்கெட்டில் தன்னம்பிக்கையே பிரதானம். பாகிஸ்தான் தொடர்ச்சியாக ஏழு, எட்டு ஐசிசி தொடர்களில் தோற்றுள்ளதால், அவர்களுக்கு பெரும் அழுத்தம் இருக்கும்" என்றார்.

"கிரிக்கெட் வெகுவாக மாறிவிட்டது. இந்திய இளம் வீரர்கள் அச்சமின்றி விளையாடுகிறார்கள். ஒரு ஓவரில் பவுண்டரி அல்லது சிக்ஸர் கூட ஆட்டத்தின் போக்கை மாற்றும். ஹர்திக் பாண்டியா அழுத்தமான சூழலில் சிறப்பாக செயல்படுவார். பாகிஸ்தானுக்கு எதிராக பேட்டிங், பந்துவீச்சு இரண்டிலும் அவருக்கு வலுவான சாதனைகள் உள்ளது"என மோங்கியா நம்பிக்கை தெரிவித்தார்.




# பிப்ரவரி 24 அதிமுகவினருக்கு இன்ப அதிர்ச்சி: எடப்பாடியார் திட்டம்

தி கோவை ஹெரால்டு



மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களின்பிறந்தநாளான பிப்ரவரி 24-ம் தேதி, முதற்கட்ட வேட்பாளர் பட்டியலை வெளியிட்டு தொண்டர்களை உற்சாகப்படுத்தஅதிமுகதலைமை திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது


2026தமிழகசட்டமன்றத் தேர்தல் களத்தில், ஆளுங்கட்சியான திமுக மற்றும் எதிர்க்கட்சியான அதிமுக ஆகிய இரண்டு துருவங்களும் தங்கள் வியூகங்களை வகுப்பதில் தீவிரம் காட்டி வருகின்றன. இதில், தேர்தல் முன்னேற்பாடுகளில் அதிமுக ஒரு படி முன்னிலையில்இருப்பதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். பிப்ரவரி கடைசிவாரம்தேர்தல்தேதி அறிவிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது. மேற்கு வங்க SIR இறுதி லிஸ்ட் பிப்ரவரி 28ம் தேதி வரலாம் என்று கூறப்படுகிறது. இதனால் அதற்கு மறுநாள் தேர்தல் தேதி அறிவிப்பு வெளியிப்பிடப்படும்.

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இந்த முறை தேர்தலை மிகவும் திட்டமிட்டு அணுகுகிறார். பாமக, பாஜக மற்றும் தேமுதிக உள்ளிட்ட முக்கிய கட்சிகளுடன் ஏற்கனவே கூட்டணிப் பேச்சுவார்த்தைகளை ரகசியமாகவும்வேகமாகவும் முடித்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

கூட்டணிக் கட்சிகளுக்கான தொகுதிகள் எவை என்பதில் ஒரு தெளிவு கிடைத்துள்ள நிலையில், தற்போது வேட்பாளர் தேர்வில் அதிமுக தீவிரம் காட்டி வருகிறது. மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாபிறந்தநாளான பிப்ரவரி 24-ம் தேதி, முதற்கட்ட வேட்பாளர் பட்டியலை வெளியிட்டு தொண்டர்களை உற்சாகப்படுத்த அதிமுக தலைமை திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது. முன்கூட்டியே வேட்பாளர்களை அறிவிப்பதன் மூலம், தொகுதிப் பணிகளைச் செய்ய அவர்களுக்கு கூடுதல் அவகாசம் கிடைக்கும்என்பதுஅக்கட்சியின் கணக்கு. ஜெயலலிதா பொதுவாக இதேபோல் வேகமாக செயல்படுவார். அதே ஸ்டைலை எடப்பாடி பழனிசாமி கையில் எடுத்துள்ளார்.

# மனிதர்களால் முடமான ரிவல்டோ

தி கோவை ஹெரால்டு



நீலகிரி மாவட்டம் மசினக்குடி பகுதியில் ரிவால்டோ' என்கிற காட்டு யானைவெகுபிரபலம்.அந்த யானைக்கு 'ரிவால்டோ' என்றபெயர் எப்படி வந்தது என்பதில் இருந்துதான் தொடங்குகிறது கதை. வழக்கமாக மனிதப் பரிச்சயமற்ற, ஒரு முரட்டுத்தனமான காட்டு யானையாகத்தான் அதுவும் இருந்தது. ஒருநாள் காட்டுப்பன்றிகளுக்கு வைத்த பொறியில் சிக்கி, அதன் தும்பிக்கை முனை துண்டாகிவிட்டது. அப்போதிருந்து உணவைத்தும்பிக்கையில் எடுத்து உண்ண மிகவும் சிரமப்பட்டது. செய்வதறியாத நிலையில், அந்தப் பகுதியில் உள்ள விடுதிக்குப் பக்கத்தில் வந்துநின்றதுஅந்தயானை. முதலில் யானையைப் பார்த்து மிரண்டாலும், பிறகு அதன் நிலையைக் கண்டு பரிதாபம் பிறந்தது அந்தவிடுதிஉரிமையாளர் மார்க்குக்கு.

வனத்துறைக்குஉடனே தகவல் தெரிவிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. புண்ஆறினாலும்அதனால் பழைய வேகத்துடன் உணவை எடுத்து உண்ண முடியவில்லை. தேவையான உணவை உண்ண முடியாததால் மெலிந்துபோய், மார்க் விடுதியையே சுற்றிச் சுற்றி வந்தது. அந்தக் காட்டு யானை தன் உதவியை நாடுவதைப் புரிந்துகொண்ட மார்க், 'இந்த யானைக்கு நாமே உணவை ஊட்டிவிட்டால் என்ன?' என நினைத்தார். கொஞ்சம் உதறல் எடுத்தாலும் உணவை எடுத்துக்கொண்டு அதன் அருகில் தைரியத்துடன் சென்றார். மார்க்கை, மனதார ஏற்றுக்கொண்டு அவர் தந்த உணவால் பசியாறியது அந்த யானை.

பிரேசில் கால்பந்து வீரர் ரிவல்டோவில் தீவிர ரசிகரான, மார்க், அந்த யானைக்குரிவல்டோஎன்று பெயர் சூட்டி செல்லமாக அழைத்தார்.ஒருகட்டத்தில் மார்க்இறந்துவிட,ரிவல்டோ மீண்டும் ஆதரவற்று போனது . தற்போது, கண் தெரியாத நிலையில், மசினகுடி பகுதியை சுற்றி வந்தது. கடந்த ஒரு வார காலமாக உடல் நலம் குன்றி காணப்பபட்டது. வனத்துறையினர், ரிவல்டோவுக்கு சிகிச்சை அளித்து வந்த நிலையில், பிப்ரவரி 13ம் தேதி பரிதாபமாகஇறந்துபோனது. இதனால், மசினக்குடி மக்கள் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர்.



## MoU Signing Ceremony Between SRIT and Saferay India




Sri Ramakrishna Institute of Technology (SRIT) signed a Memorandum of Understanding with Saferay India, to strengthen industry-academia collaboration in renewable energy. The MoU, signed by Dr. Sundar Ramakrishnan, Managing Trustee, SNR Sons Charitable Trust, and Gowtham Ranganathan, Director of Saferay India, establishes a framework for student internships, consultancy projects, and knowledge exchange initiatives. As part of this collaboration, Saferay India has provided internship opportunities to three students from the Department of Electrical and Electronics Engineering at SRIT.

## Special Train Service from Chennai to Kollam via podanur for Maha Shivaratri


In view of Maha Shivaratri, the railway authorities have announced a special train service between Chennai and Kollam via Podanur route. According to a press release issued by the Salem Railway Division, the ChennaiKollam Special (Train No. 06113) will depart from Chennai Central on February 13 at 11:55 PM and is scheduled to reach Kollam the next day at 4:30 PM. In the return direction, the KollamChennai Special (Train No. 06114) will leave Kollam on February 16 at 6:30 PM, reaching Chennai Central the following day at 10:30 AM.

The train will halt at several important stations en route, including Koyanakulam, Mavelikkara, Chengannur, Tiruvalla, Changanassery, Kottayam, Ernakulam Town, Aluva, Thrissur, Palakkad, Podanur, Tiruppur, Erode, Salem, Jolarpettai, Katpadi, Arcot, Thiruvallur, and Perambur.

This special train service aims to provide convenient travel for devotees visiting temples and participating in Maha Shivaratri festivities.

## M.N.Padmanabhan Appointed Advisor to Delhi Media Association

THE KOVAI HERALD



The Delhi Media Association, at its Executive Meeting held at Connaught Place, New Delhi, appointed M. N. Padmanabhan as Advisor to the Association.

Padmanabhan, Managing Director of Lakshaka Tex LLP and President of Nanneri Kazhagam, Coimbatore, was inducted during the emergency executive session convened to plan the Association's upcoming annual program scheduled for March. Swami Akhandanand from Rishikesh, Uttarakhand, graced the occasion as a special guest. Members unanimously welcomed his appointment and expressed confidence that his leadership experience and organizational expertise would strengthen the Association's future initiatives.

The meeting also discussed preparations for the annual event, with further deliberations planned in early March to finalize the program's framework.

## Kongunadu College Celebrates National Science Day with 'Physicon 2K26'



THE KOVAI HERALD

Kongunadu Arts and Science College celebrated National Science Day by organising "Physicon 2K26," an inter-collegiate Physics fest, on its campus. The event was jointly organised by the Department of Physics and the Kongunadu Astronomy Club.

The chief guest for the occasion was P. Gayathri nathan, an alumnus of the Physics Department and Director of a private firm. More than ten colleges participated in the event, with enthusiastic involvement from undergraduate and postgraduate students. For undergraduate students, events included Physics Quiz, Electronics Practical, Memory Test, Science Drawing, Rangoli, and Photography.

Postgraduate competitions featured Advanced Quiz, Research Paper Presentation, Scientific Model Design, and Best Research Presentation.

PSGR Krishnammal College for Women, Coimbatore, won the overall championship title. PSG College of Arts and Science secured the second place, while Sri GVG Visalakshi College for Women, Udumalpet, claimed the third position. Participation certificates were distributed to all participants, and winners were awarded prizes.

## SSVM Vidhan Celebrates its annual day with Grandeur and Inspiration



THE KOVAI HERALD

A blissful and vibrant atmosphere prevailed at SSVM Vidhan Matriculation Higher Secondary School as the campus hosted Samskruteh Varnah, a colourful celebration highlighting values, culture, and holistic development.

The event was graced by the presence of the Founder and Managing Trustee, Dr. Manimekalai Mohan, and Trustee Mohandoss, who felicitated the Chief Guest, Professor Dr. Parveen Sulthana, an internationally acclaimed motivational speaker. The gathering was warmly welcomed by Smirithi. The stage came alive with vibrant cultural performances under the theme Samskruteh Varnah, reflecting creativity and traditional values. The celebration was a resounding success, leaving a lasting impression on the hearts of students, staff, and parents. The programme concluded with a cordial vote of thanks proposed by Harsith

## Three 3040-Year-Old Trees Transplanted in Coimbatore in Major Environmental Initiative

In a significant step towards environmental conservation, the Coimbatore Builders and Contractors Association successfully relocated and replanted three large trees aged between 30 and 40 years under the theme "Save Trees Save Soil." The event was held at Dr. G.R.D. College of Arts and Science (Autonomous), Avinashi Road.



As part of the initiative, one banyan-family tree and two neem trees located on land owned by G.Srinivasan, Managing Director of Srinivasan Associates Private Limited in the Hope College area, were carefully uprooted and transplanted to a new location. The programme was presided over by Association President Ramya R. Senthil.

Dr. K. Madeswaran, Founder-Chairman and Managing Director of Royal Care Hospital, attended as the chief guest and inaugurated the tree transplantation process. Dr. K.K. Ramachandran, Vice Principal of Dr. G.R.D. College of Arts and Science. Association Executive Committee Member Valluvan. Geetha Padmanaban, Correspondent of the GRD Educational Institutions, Secretary A. Samsudeen Social Panel Chairman R.Selvaraj. also participated in the programme.

## Tamil Nadu Open End Mills Association Seeks Rs.20 Reduction in Waste Cotton Prices

THE KOVAI HERALD
■ L.Rajagopal

The Tamil Nadu Open End Mills Association has urged spinning mills to reduce the price of waste cotton by Rs.20 per kilogram, citing severe impact on production in Open End (OE) spinning mills across the state.

Speaking to the media, Association President Arulmozhi said that the sharp increase in waste cotton prices has adversely affected OE spinning mills. More than 250 OE mills in Tamil Nadu use waste cotton to manufacture grey cotton yarn. This yarn is supplied to powerloom clusters in Palladam, Somanur, Avinashi, Mangalam, and Erode, where it is woven into grey fabrics and sold in northern states.



↑ Arulmozhi, President, Tamil Nadu Open End Mills Association.

He stated that two months ago, comber waste cotton was sold to spinning mills at ₹105 per kg. However, the price has now increased to Rs.128 per kg.

This steep hike has put OE mills and powerloom units under significant financial strain.

Although raw cotton prices have slightly declined in the past week, spinning mills have not reduced waste cotton prices, he pointed out.

Due to the increase in input costs, the price of 20s weft yarn has risen from Rs.137 to Rs.152 per kg, while 20s warp yarn has increased from Rs.158 to Rs.168 per kg. As a result, OE mills are operating under heavy losses.

Arulmozhi appealed to spinning mill managements to reduce waste cotton prices by ₹20 per kg to ensure the smooth functioning of all sectors in the textile value chain.

### From Begging to Business

## How Social Surya Transformed Coimbatore's Traffic Signals

THE KOVAI HERALD

Coimbatore is inherently beautiful. Previously, at every traffic signal in the city, many people—including the elderly, children with infants, and the homeless—would beg for money from motorists and pedestrians, causing discomfort and embarrassment for everyone.

However, today, no one begs for money at any of the signals. Instead, everyone has started selling items like vehicle cleaning supplies and decorative accessories for two-wheelers and four-wheelers. Consequently, the city of Coimbatore has undergone a positive transformation; those who once sought alms have now evolved into small-scale entrepreneurs and hard-working laborers.



The primary reason for this change is Social Surya from Coimbatore. He personally purchased essential vehicle-related products at wholesale prices and distributed them to these individuals, encouraging them to progress by selling these goods rather than begging.

Following his initiative, all traffic signals in the city now present a much better environment. Social Surya's efforts are receiving widespread praise and appreciation from the public.

## Factories Must Submit ESI Contributions by the 15th of Every Month

The Coimbatore Sub-Regional Office has announced that all industrial establishments and factories must deposit their ESI (Employees' State Insurance) contributions by the 15th of each month. This is aimed at ensuring social security benefits for employees.

This directive comes under the EPFO 2025 initiative, a special effort to expand social security coverage under the ESI Act. The program was in operation from July 1, 2025, to January 2026. During this period, around 3,800 new factories and establishments in the Coimbatore sub-region were registered, and the employees working in them were brought under the government insurance scheme.

All new factories and establishments, including contract and temporary employees, are required to register their staff under the ESI scheme. Furthermore, both employer and employee ESI contributions must be paid via the ESIC website by the 15th of each month or earlier, ensuring that the scheme's benefits reach the registered employees directly.

FOR NEWS Publication
9244317182
04223147962

## Tourism Malaysia Holds Sales Mission 2026 in Coimbatore



Tourism Malaysia organised its Sales Mission 2026 in Coimbatore at Le Meridien in partnership with the Malaysian Association of Tour and Travel Agents (MATTA), bringing together 49 Malaysian sellers and leading travel trade partners from the Kongu region. The mission was led by Tourism Malaysia Chairman Datuk Manoharan Periasamy and Mdm Nuwal Fadhilahbinti Ku Azmi, Senior Director, International Promotions (Asia/Africa).

Hishammuddin Mustafa, Director of Tourism Malaysia, Chennai, noted that Coimbatore remains a key outbound market in South India and plays an important role in Malaysia's India strategy. The Sales Mission was supported by Batik Air as the Official Airline Partner and Scoot as the Partner Airline for the Coimbatore programme.

# ஈஷாவில் மஹாசிவராத்திரி விழா

## மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் பங்கேற்பு



ஈஷா யோக மையத்தில் மஹாசிவராத்திரி விழா கொண்டாட்டங்கள் வரும் பிப்ரவரி 15ம் தேதி கொண்டாடப்பட உள்ளது. இவ்விழாவில் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள் சிறப்பு விருந்தினராக பங்கேற்க உள்ளார்.

இது தொடர்பான பத்திரிக்கையாளர் சந்திப்பு வியாழக்கிழமை கோவை பிரஸ் கிளப்பில் நடைபெற்றது. இதில் தென் கைலாய பக்தி பேரவையின் தன்னார்வலர் ரவீந்திரன் கலந்துகொண்டு பேசினார். அவருடன் தன்னார்வலர் சரவணன் உடனிருந்தார்.

அவர்கள் பேசுகையில், "ஈஷாவில் 32-ஆவது மஹாசிவராத்திரி கொண்டாட்டங்கள் வரும் 15-ஆம் தேதி மிக பிரம்மாண்டமான அளவில் நடைபெற இருக்கிறது. இதில் சிறப்பு விருந்தினர்களாக பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் மற்றும் லட்சக்கணக்கான பொது மக்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

ஈஷாவில் மஹாசிவராத்திரி விழா ஆதியோகி முன்பு வரும் 15-ஆம் தேதி மாலை 6 மணிக்கு தொடங்கி மறுநாள் காலை 6 மணி வரை கொண்டாடப்பட உள்ளது.

ஆதியோகி முன்பு சத்குருவுடன் நடைபெறும் இவ்விழாவில் சக்திவாய்ந்த தியானங்கள், மந்திர உச்சாடனைகள், யோகேஷ்வர லிங்க மஹா அபிஷேகம் மற்றும் தலைசிறந்த கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகள் உட்பட பல்வேறு அம்சங்கள் இடம்பெற உள்ளன.

மஹாசிவராத்திரி இரவு முழுவதும் தியானலிங்கம் மற்றும் லிங்க பைரவி வளாகங்கள் பொது மக்களின் தரிசனத்திற்கு திறந்து இருக்கும்.

தியானலிங்கத்திற்கு பொது மக்கள் தங்களின் கைகளாலேயே அபிஷேகமும் செய்ய முடியும்.

இந்தாண்டு மஹாசிவராத்திரி அன்று, முதன்முறையாக, சத்குரு ஆதியோகி முன்பு பிரதிஷ்டை செய்யப்பட்டு இருக்கும் யோகேஷ்வர லிங்கத்திற்கு 'மஹா அபிஷேகம்' எனும் ஆன்மீக செயல்முறையை அர்ப்பணிக்க உள்ளார்.

யோகேஷ்வர லிங்கத்தின் அருளைபெறும் வகையில் குறிப்பிட்ட மந்திர உச்சாடனங்கள் மற்றும் அர்ப்பணிப்புகளுடன் இந்த அபிஷேக செயல்முறை நடைபெற உள்ளது. இதற்கான ஆன்லைன் தளத்தில் தேவையான தகவல்களை பதிவு செய்து பொது மக்கள் இந்த மஹா அபிஷேகத்தில் இலவசமாக பங்கேற்க முடியும்.

ஈஷா மஹாசிவராத்திரி விழாவின் மிக முக்கிய அம்சமாக நள்ளிரவு சந்தியா மற்றும் பிரம்மமுகூர்த்த நேரங்களில் சக்திமிகுந்த தியானங்கள் சத்குருவால் வழிநடத்தப்பட உள்ளன.

இவ்விழாவில் பங்கேற்கும் மக்கள் இரவு முழுவதும் விழிப்பாக இருக்க உதவும் வகையிலும், நம் பாரத பாரம்பரிய மற்றும் நாட்டுப்புற கலை வடிவங்களை வெளிப்படுத்தும் வகையிலும் இரவு முழுவதும் இசை மற்றும் நடன நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

இதில் தமிழ்நாட்டை சேர்ந்த ராப் இசைக்கலைஞர் பிளேஸ், குஜராத் நாட்டுப்புறக் கலைஞர் ஆதித்யா காத்வி, மகாராஷ்டிராவை சேர்ந்த தபேலா இசைக் கலைஞர் பிரசாந்த் சோனாக்ரா மற்றும் குழுவினர், ராஜஸ்தான் மாநில நாட்டுப்புறக் கலைஞர் ஸ்வரூப் கான், ராப் இசைக்கலைஞர் பாரடாக்ஸ் மற்றும் சவுண்டஸ் ஆப் ஈஷா குழுவுடன் இணைந்து பாடகர்கள் சுவாகத் ரத்தோடு, பிருத்வி காந்தர்வ் ஆகியோர் இசை நிகழ்ச்சிகளை வழங்கவுள்ளனர்.

இதனுடன் 'புராஜக்ட் சம்ஸ்கிருதி' குழுவின் சிறப்பு நாட்டிய நிகழ்ச்சியும், ஈஷா சம்ஸ்கிருதி பள்ளி மாணவர்களின் தேவார பண்ணிசை மற்றும் களரிப்பயட்டு நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன." என்றனர்.

# ராயல் கேர் புற்றுநோய் சிகிச்சை மையம் சார்பில் சர்வைவர்ஸ் மீட் அப்




கோவையில் புற்றுநோயில் இருந்து மீண்டோர் சந்திப்பு நிகழ்ச்சி நீலாம்பூர் பகுதியில் உள்ள ராயல் கேர் மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்றது. புற்று நோய் குறித்த பயம் விலகி நம்பிக்கை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில், ராயல் கேர் புற்றுநோய் சிகிச்சை ஆராய்ச்சி மையம் சார்பாக நடைபெற்ற இதில் புற்றுநோய் பாதிப்புகளில் இருந்து மீண்ட ஆயிரத்திற்கு மேற்பட்டோர் பல்வேறு பகுதிகளில் இருந்து குடும்பத்தினருடன் கலந்து கொண்டனர்.

இதில் பிரபல தன்னம்பிக்கை பேச்சாளர் ஈரோடு மகேஷ் கலந்து கொண்டு பேசினார். அப்போது பேசிய அவர், பல வித இன்னல்களை தாண்டி தன்னம்பிக்கை என்பதை உறுதியாக நிரூபித்த மாபெரும் சக்தி வாய்ந்தவர்கள் இங்கு அமர்ந்து இருப்பதாக தெரிவித்தார்... நாடகம், நடனம் போன்ற பல்வேறு கலை நிகழ்ச்சிகள் மற்றும் தமிழ்புலமை சொற்பொழிவு என பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்வுகளில், புலவர் ராமலிங்கம் அய்யா தலைமையில் கல்லூரி மாணவிகள் பங்குபெற்ற சமூக ஊடக மருத்துவம் அல்லது நேரடி மருத்துவர் ஆலோசனை — எதை நம்பலாம்? என்கிற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. புற்றுநோய் விழிப்புணர்வு என்கிற தலைப்பில் ஓவிய போட்டி மற்றும் கோலப்போட்டி (ரங்கோலி), நாடகம், நடனம் போன்ற பல்வேறு கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது. பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு சான்றிதழ்களும் பரிசுகளும் மருத்துவமனையின் தலைவர் டாக்டர் க மாதேஸ்வரன் வழங்கினார்.

முன்னதாக சர்வைவர்ஸ் மீட் அப் நிகழ்ச்சி குறித்து மருத்துவமனையின் தலைவர் டாக்டர் க மாதேஸ்வரன் மற்றும் புற்று நோய் சிகிச்சை மருத்துவ நிபுணர் என். சுதாகர் ஆகியோர் பேசுகையில், புற்றுநோய் சிகிச்சையில் தற்போது குணமடைவோர் சதவீதம் நவீன தொழில்நுட்ப வசதிகள் மூலம் அதிகரித்து இருப்பதாகவும், எனவே நோயாளிகள் பக்க விளைவுகள் இல்லாமல் எளிதில் புற்று நோய் பாதிப்புகளில் இருந்து விடுபடலாம் என நம்பிக்கை தெரிவித்தனர்.

புற்று நோய் என்றாலே குணப்படுத்த முடியாத நோய் என்ற தவறான புரிதல் பொதுமக்களிடையே இருப்பதாக தெரிவித்த அவர், இது போன்ற நிகழ்ச்சிகள் நடத்துவதால் புற்று நோய் குறித்த பயம் விலகி நம்பிக்கை அதிகரிக்க வேண்டும் என்பதே நோக்கம் என தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் புற்று நோய் சிகிச்சை மைய மருத்துவர்கள், செவிலியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பிஎப் பணத்தை யூபிஐ மூலம் எடுக்க புதிய செயலி

தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களின் ஓய்வுக்கால நிதி பாதுகாப்பிற்காக ஈபிஎஃப்ஓ அமைப்பின் மூலம் பிஎப் கணக்குகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த கணக்கில் ஊழியரும், அவர் பணிபுரியும் நிறுவனமும் மாதந்தோறும் தொகை செலுத்துகின்றனர். இந்தத் தொகைக்கு மத்திய அரசு ஆண்டுதோறும் வட்டி வழங்குகிறது.

தற்போது, பிஎப் கணக்கில் உள்ள பணத்தை பெற தொழிலாளர்கள் வங்கிகள் வழியாக அல்லது ஆன்லைனில் விண்ணப்பித்து மட்டுமே எடுத்துக் கொள்ள முடிகிறது. விண்ணப்பித்த பிறகு சில நாட்கள் காத்திருக்க வேண்டிய நிலையும் உள்ளது. இந்த நிலையில், பிஎப் பணத்தை நேரடியாக யூபிஐ மூலம் வங்கிக் கணக்கிற்கு மாற்றிக் கொள்ளும் புதிய வசதியை மத்திய அரசு அறிமுகம் செய்ய உள்ளது. இதற்காக தனியான செயலி உருவாக்கப்பட்டு வருவதாகவும், அது வரும் ஏப்ரல் மாதத்தில் அறிமுகம் செய்யப்படும் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த புதிய செயலி மூலம், தொழிலாளர்கள் தங்களுக்குத் தேவையான அளவு தொகையை மட்டும் எடுத்துக் கொண்டு, மீதமுள்ள பணத்தை பிஎப் கணக்கில் வைத்திருக்க முடியும். மேலும், கணக்கில் உள்ள மொத்த இருப்புத் தொகை போன்ற விவரங்களையும் செயலி மூலம் அறிந்து கொள்ள முடியும். பிஎப் பணத்தை பெறும் நடைமுறை மிகவும் எளிமையாகி, தொழிலாளர்களுக்கு பெரும் நன்மை ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# மறுசுழற்சி ஜவுளித் தொழில் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## மறுசுழற்சி ஜவுளி கூட்டமைப்பு கோரிக்கை

தி கோவை ஹெரால்டு
■ L.ராஜகோபால்



கழிவு பஞ்சு விலை உயர்வால் தடுமாறும் மறுசுழற்சி ஜவுளித் தொழிலை பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மறுசுழற்சி ஜவுளி தொழில் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து மறுசுழற்சி ஜவுளி கூட்டமைப்பின் தலைவர் ஜெயபால் கூறியதாவது: 202526 பருத்தி சீசன் நவம்பர் மாதத்தில் ஒரு கேண்டி பருத்தி விலை ரூ.51,000 என்ற நிலையில் விற்பனை தொடங்கி, தற்போது ரூ.56,000 வரை உயர்ந்துள்ளது.

பருத்தி சீசன் தொடங்கும் முன்பு, செப்டம்பர் மாதத்தில் பருத்தி விலை ரூ.56,000 என அதிகபட்சமாக இருந்த போது, ஓ.இ மில்களின் முக்கிய மூலப்பொருளான கோம்பர் வேஸ்ட் ரூ.102-க்கு ஸ்பின்னிங் மில்களால் விற்பனை செய்யப்பட்டது.

ஆனால் 202526 பருத்தி சீசன் நவம்பர் மாதம் தொடங்கியதிலிருந்து, பருத்தி விலை ரூ.51,000 வரை குறைந்திருந்த போதிலும், கழிவு பஞ்சுகளின் விலைகள் ரூ.107, 108, 110, 112, 115 என தொடர்ந்து உயர்த்தப்பட்டு, தற்போது கோம்பர் வேஸ்ட் ரூ.123125 என்ற அளவில் ஸ்பின்னிங் மில்கள் விற்பனை செய்து வருகின்றன. இதனால் ஓ.இ மில்களை நடத்தவே இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த விவகாரம் குறித்து கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பே பத்திரிகைகள் மற்றும் ஊடகங்கள் வாயிலாகவும் அரசின் கவனத்திற்கும் கொண்டுசென்றுள்ளோம்.

தீபாவளி காலத்தில் ஓ.இ நூல்களின் விலை 20s வார்ப் நூல் ரூ.165, வெப்ட் நூல் ரூ.148150 வரை இருந்தது. தற்போது கழிவு காட்டன் விலை கிலோக்கு ரூ.23 உயர்ந்திருந்தாலும், வார்ப் ரூ.165, வெப்ட் ரூ.155 என்ற விலைக்கும் கீழாகவே நூல்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இதனால் கழிவு பஞ்சின் விலை உயர்ந்தும், நூலுக்கு தகுந்த விலை கிடைக்காத காரணத்தால், கடந்த மூன்று மாதங்களாக ஏற்பட்டுள்ள நஷ்டத்தை குறைக்க முடியாத நிலை தொடர்கிறது.

மேலும் ஆட்கள் பற்றாக்குறை மற்றும் உற்பத்தி செலவுகள் அதிகரித்துள்ளதால், பெரும்பாலான ஓ.இ மில்கள் கடந்த மூன்று மாதங்களாக உற்பத்தியை குறைத்தே இயக்கி வருகின்றன. 30 கவுண்ட் நூலுக்கு கடந்த நான்கு மாதங்களாக போதிய ஆர்டர்கள் இல்லாத காரணத்தால், பலர் சலவை நூல் உற்பத்திக்கு மாறி விட்டனர்.

எங்களது நிலைப்பாட்டை தொடர்ந்து அரசிடம் தெரிவிக்க வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. 2014-க்கு முன்பு வரை, பருத்தி விலையிலிருந்து அதிகபட்சமாக 48 சதவீதம் வரை மட்டுமே முதல் தர கழிவு பஞ்சான கோம்பர் வேஸ்ட் விலை இருந்தது. ஆனால் கொரோனா பேரிடருக்குப் பிறகு, மத்திய மற்றும் மாநில அரசாங்க மில்கள் செயல்படாத காரணத்தால், தனியார் ஸ்பின்னிங் மில்களில் டெண்டர் நடைமுறை குறைந்து, தூய பருத்தி விலையிலிருந்து 80%-க்கும் மேல் கழிவு பஞ்சின் விலையை தன்னிச்சையாக நிர்ணயம் செய்து அறிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக, ஓ.இ மில்கள் மட்டுமின்றி, விசைத்தறி, கைத்தறி உள்ளிட்ட சங்கிலித் தொடரில் உள்ள அனைவரும் கடுமையான நிதி இழப்பை சந்தித்து வருகின்றனர். தற்போது ரூ.4.5 லட்சமாக மதிப்பிழந்துள்ளது. நூற்றுக்கும் மேற்பட்ட மில்கள் கிரே நூல் உற்பத்தியில் இருந்து வெளியேறியுள்ளன.

மத்திய, மாநில அரசு காட்டன் கார்ப்பரேசன் ஆப் இந்தியா நிறுவனம் பருத்தி பஞ்சை டெண்டர் மூலம் ஸ்பின்னிங் மில்களுக்கு விற்பனை செய்வதைப்போல, கழிவு பஞ்சுகளையும் டெண்டர் முறையில் ஸ்பின்னிங் மில்கள் விற்பனை செய்ய அறிவுறுத்தி, அதனை கண்காணிக்க வேண்டும்.

ஜவுளி சங்கிலி தொடரில் உள்ள அனைத்து தொழில்களையும் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எங்கள் கோரிக்கை ஆகும். இவ்வாறு அவர் கூறினார்.

# கோவையில் வீடு மற்றும் வீட்டுக் கடன் கண்காட்சி துவக்கம்

தி கோவை ஹெரால்டு






வி.ஜி. விளம்பரம் மற்றும் ஈவன்ட் மேனேஜ்மென்ட் நிறுவனம் சார்பில் வீடு மற்றும் வீட்டுக் கடன் கண்காட்சி கோவை கொடிசியா ஹால் 'B'-யில் நடைபெற்றது.

ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா வங்கி டைட்டில் ஸ்பான்சராக உள்ள இக்கண்காட்சியை ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா வங்கியின் பொது மேலாளர் (நெட்வொர்க்-3) சித்தபட்டுலா ஹரிதா பூர்ணிமா குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார். துணைப் பொது மேலாளர் (B & O) அருண் எஸ்.எல். வரவேற்புரை ஆற்றினார். நடிகை சுஜிதா சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா வங்கியின் மண்டல மேலாளர் ரங்கநாதன் மற்றும் காயத்திரி, தியா ஃபவுண்டேஷன் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குனர் கே.ஜி.ஸ்ரீராம், ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா வங்கியின் HLST பிரிவு அஷ்வின், கோயம்புத்தூர் காசா கிராண்ட் நிறுவனத்தின் முதன்மை மேலாளர் மற்றும் திட்டத் தலைவர் மார்க்கெட்டிங் எஸ். ஆர்.அன்பு செல்வன், லம்போதரா புரமோட்டர்ஸ் நிறுவனத்தின் இயக்குனர் ரத்தினவேல், வி.ஜி.விளம்பரம் மற்றும் ஈவன்ட் மேனேஜ்மென்ட் நிறுவனத்தின் உரிமையாளர் வி.கீதா, ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியின் முதன்மை மேலாளர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

100-க்கும் மேற்பட்ட குடியிருப்பு திட்டங்கள் இக்கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன. ரூ.5 லட்சம் முதல் ரூ.10 கோடி வரையிலான அபார்ட்மென்ட், வில்லா, பங்களா, மனையிடம் மற்றும் உடனடி குடியேற்ற வீடுகள் ஆகியவை ஒரே இடத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. கவுண்டம்பாளையம், ஆர்.எஸ்.புரம், வடவள்ளி, நவ இந்தியா, திருச்சி சாலை, சரவணம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள திட்டங்கள் இதில் இடம்பெற்றன. ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா சார்பில் குறைந்த வட்டி விகிதத்தில் வீட்டுக் கடன், கார் கடன் மற்றும் அடமானக் கடன் வசதிகள் வழங்கப்பட்டன. தேவையான ஆவணங்களுடன் பொதுமக்கள் நேரடியாக விண்ணப்பித்து உடனடி கடன் ஆலோசனையை வழங்கப்பட்டது.

ஸ்பாட் புக்கிங் செய்வோருக்கு ஐபோன், இ.பைக், தங்கநாணயங்கள் மற்றும் ரொக்க தள்ளுபடி உள்ளிட்ட சிறப்பு சலுகைகள் அறிவிக்கப்பட்டன. முன்னணி கார் டீலர்களுடன் கார் மேளாவும் நடைபெற்று, நவீன மற்றும் மின்சார கார்கள் சிறப்பு சலுகைகளுடன் காட்சிப்படுத்தப்பட்டது. குடும்பத்துடன் வருவோருக்காக உணவுத் திருவிழாவும், சிறுவர்களுக்கான ஓவியப் போட்டியும் நடத்தப்பட்டது. வெற்றியாளர்களுக்கு ரூ.10,000 மதிப்புள்ள பரிசுகள் மற்றும் பிளாக் தண்டர் தீம் பார்க்கிற்கான இலவச டிக்கெட்டுகள் வழங்கப்பட்டன.


# கோவை குண்டுவெடிப்பு தினம்: திமுக மீது அண்ணாமலை சாடல்



கோவை குண்டுவெடிப்பு தினத்தையடுத்து, பாரதிய ஜனதா கட்சி தலைவர்களில் ஒருவரான அண்ணாமலை தனது பேஸ்புக் பதிவில் வெளியிட்டுள்ளதாவது, கோவையில் கடந்த 1998 ஆம் ஆண்டு பிப்ரவரி 14ம் தேதி திமுக ஆட்சியில், பயங்கரவாதிகளால் தொடர் குண்டு வெடிப்பு நிகழ்த்தப்பட்டதில், 58 உயிர்களைப் பறிகொடுத்தும், சுமார் 200 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்ததும், நமது மனதில் ஆறாத வடுவாகப் பதிவாகியிருக்கின்றன. இந்திய அளவில், பொருளாதாரத்தில் முதல் இடங்களில் வந்திருக்க வேண்டிய நமது கோயம்புத்தூர் மாநகரம், பிரிவினைவாத சக்திகளாலும், தேர்தல் வாக்குகளுக்காக அவர்களுக்குத் துணை போகும் திமுக உள்ளிட்ட கட்சிகளாலும் பல ஆண்டுகள் பின்னோக்கிப் போய்விட்டது.

கோவை குண்டுவெடிப்பு குற்றவாளிகளை தண்டனைக் காலம் முன்பாகவே விடுவித்து, உயிரிழந்த அப்பாவி மக்களுக்குத் துரோகம் செய்தது திமுக. இன்றும், கோட்டை ஈஸ்வரன் கோயில் அருகே நடந்த தற்கொலைப் படை தாக்குதலை, சிலிண்டர் வெடிப்பு என்று கூறி, மீண்டும் பயங்கரவாதிகளுக்குத் துணை போகிறது. தேர்தல் வாக்குகளுக்காக, பொதுமக்கள் பாதுகாப்பையே கேள்விக்குறியாக்கும் திமுகவை அகற்றுவதே, கோயம்புத்தூர் பயங்கரவாதிகள் தாக்குதலில் தங்கள் உயிரை இழந்த அப்பாவிப் பொதுமக்களுக்கு நாம் செய்யும் அஞ்சலி.

# ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 39வது ஆண்டு விளையாட்டு விழா




தி கோவை ஹெரால்டு

கோவை ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உடற்கல்வித்துறையின் சார்பில்39வதுஆண்டுவிளையாட்டுவிழாகல்லூரிகலையரங்கில் நடைபெற்றது.

ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் மற்றும்செயலர்முனைவர் பி.எல்.சிவக்குமார் விழாவிற்குத் தலைமை வகித்தார். விழாவில் கோயம்புத்தூர்,மதுக்கரை 195 ஃபீல்ட் ரெஜிமென்ட் மேஜர் கே.பி.ராஜேஷ் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். கோயம்புத்தூர், இந்திய இரயில்வே தேசிய தடகள பயிற்சியாளர் மற்றும் முன்னாள் ஆசிய பதக்க வெற்றியாளர் கே.எஸ். முகமத் நிஜாமுதின் அவர்கள் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டார்.


அதைத் தொடர்ந்து, பேட்மிண்டன், சதுரங்கம், கபடி, கோ கோ, டேபிள் டென்னிஸ், கைப்பந்து, கிரிக்கெட், வீச்சு பந்து, கால்பந்து உள்ளிட்ட போட்டிகளில் முதல் மூன்றுஇடங்களைவென்ற மாணவ, மாணவிகளைப் பாராட்டி பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

பின்னர், அனைத்து நிலைகளிலும் முதலிடம் பெற்ற மாணவ மாணவியர் அணிகளுக்கு வெற்றிக்கோப்பையும் பதக்கமும் சான்றிதழும் வழங்கப்பட்டன. அதன்படி, மாணவர் அணியில் இளநிலை பிபிஏ துறை முதலிடம் பிடித்து கோப்பையை வென்றது. அதேபோல் மாணவியர் அணியில் முதுநிலை எம். பி.ஏ மற்றும் எம்.எஸ். டபிள்யூ துறை முதலிடம் பிடித்து கோப்பையை வென்றது.

முன்னதாக உடற்கல்வித்துறை இயக்குநர் முனைவர் ஆர்.ரவிச்சந்திரன் அனைவரையும்வரவேற்று உடற்கல்வித்துறையின் ஆண்டறிக்கையை வாசித்தார். முடிவாக, ஸ்போட்ஸ்கிளப்மாணவச் செயலர் வி.எல்.ஸ்ரீ முரளி நன்றி கூறினார். விழாவில் பல்வேறு துறைகளைச் சார்ந்த துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் திரளாகக் கலந்து கொண்டனர். விழாவினை உடற்கல்வித்துறைப் பேராசிரியர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

# கொங்குநாடு கல்லூரியில் ஐசிஎஸ்எஸ்ஆர் நிதியுடன் கொங்கு பாரம்பரிய மருத்துவ ஆய்வு

தி கோவை ஹெரால்டு



கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரிக்கு கொங்கு மண்டலத்தில் உள்ளபாரம்பரியமருத்துவ குறிப்புகளை ஆவணபடுத்துவதற்காகமுனைவர் பட்ட மேல் ஆய்வுக்கான நிதி உதவியை இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம் வழங்கியுள்ளது.

டாக்டர் எம். சௌந்தரராஜ் இந்த ஆராய்ச்சியில் பாரம்பரிய தமிழ் மருத்துவ குறிப்புகளை சேகரித்து ஆவணப் படுத்துவார். மொழி ஆராய்ச்சி துறையில் அறிவுசார் பாரம்பரியங்களை பாதுகாத்தல் என்ற பிரிவின் கீழ் கொங்கு மண்டலத்தில் உள்ள 6 மாவட்டங்களில் இந்த ஆய்வு இரண்டு ஆண்டுகளுக்கு நடைபெறும். பரம்பரை பாரம்பரியமருத்துவர்களை நேரில் நேர்காணல் செய்து கேள்வித்தாள் முறையில் விவரங்கள் சேகரிக்கப்படும்.

6 மாவட்டங்களில் புழக்கத்தில் உள்ள பாரம்பரிய மருத்துவ குறிப்புகள், மருந்து தயாரிப்புமுறைகள், மற்றும் அதுசார்ந்த குறிப்பேடுகள் ஆகியவைசேகரிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்படும். நிதி நல்கிய அனுமதி ஆணையை கல்லூரியின் செயலர் டாக்டர். சி.ஏ.வாசுகியிடமிருந்து சௌந்தர்ராஜ் பெற்றுக்கொண்டார்.

இந்த ஆய்வானது தமிழ் துறைத் தலைவர் ஆர். மணிமேகலையின் நெறிக்காட்டுதலின் கீழ் நடைபெறும்.

## கும்பமேளாவில் இருந்து சினிமா வரை

# ‘மோனலிசா போஸ்லே’ வாழ்க்கையில் அதிரடி மாற்றம்





இந்தூரைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் தனது குடும்பத்தினருடன்சேர்ந்து கும்பமேளாவில் ருத்ராட்ச மாலை விற்பனை செய்து வந்தார். அவரின் இயல்பான அழகும் காந்தக் கண்களும் பலரது கவனத்தை ஈர்த்தது. யூடியூபர் ஒருவர் எடுத்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவியதைத் தொடர்ந்து, அந்தப் பெண் ஒரே இரவில் பிரபலமாகினார். அவரது தோற்றத்தை கண்டு நெட்டிசன்கள் அவருக்கு ‘மோனலிசா போஸ்லே’ என்று பெயர் சூட்டினர்.

சமூகவலைதளங்களில் பெரும் வரவேற்பைப் பெற்ற மோனலிசாவுக்கு சினிமா வாய்ப்புகள் வீடு தேடி வந்தன. மும்பைக்கு அழைத்து செல்லப்பட்ட அவர், திரைப்படத்திற்காக தனது தோற்றத்திலும் மாற்றம்செய்துகொண்டார். நகைக்கடை மற்றும் பல்வேறு திறப்பு விழாக்களில்சிறப்புவிருந்தினராக பங்கேற்று வந்த அவர், தற்போதுதேவதைபோன்ற தோற்றத்தில் ரசிகர்களை கவர்ந்து வருகிறார்.

தற்போது ஒரு இந்தி திரைப்படத்திலும், இரண்டு தெலுங்கு திரைப்படங்களிலும் நடித்து வரும் மோனலிசா, சமீபத்தியபேட்டியில்தனது வாழ்க்கைமாற்றம் குறித்து பகிர்ந்துகொண்டார். “கும்பமேளா மூலம் என் வாழ்க்கை இவ்வளவு உயர்வு அடையும் என்று நினைக்கவில்லை.திடீரென கிடைத்த புகழ் எனக்கு பொறுப்பையும் கொண்டு வந்துள்ளது. என்னை இந்த நிலைக்கு கொண்டு வந்த சமூகத்திற்குநான்திருப்பிச் செய்ய விரும்புகிறேன்,” என்று தெரிவித்தார்.

மேலும், தனது சொந்த ஊரில் பெண்களுக்கான ஒரு பள்ளியை கட்ட முடிவு செய்திருப்பதாகவும், தனது முதல் திரைப்பட சம்பளத்தை அதற்காக பயன்படுத்தஉள்ளதாகவும் கூறினார். “கல்வி மூலம் தான் சமூகத்தில் நல்ல மாற்றம் ஏற்படும். எனவே எனக்கு கிடைக்கும் வருமானத்தை கல்விக்காக செலவிட விரும்புகிறேன்,” என அவர் உறுதியாக தெரிவித்தார்.

கும்பமேளாவில் சிறிய வியாபாரியாக இருந்த மோனலிசா போஸ்லே, இன்று சினிமா உலகில் அடியெடுத்து வைத்து சமூகப்பணியிலும் ஆர்வம் காட்டுவது பலரது பாராட்டைப் பெற்று வருகிறது.

# ‘வாகை சூட வா’ போட்டியில் கோவை மாணவர் ஜெய் ஆகாஷ் மூன்றாம் இடம்



வாகை தமிழ்ச் சங்கம் சார்பில் ‘வாகை சூட வா’ என்றபெயரில்நடத்தப்பட்ட மாநில அளவிலான தமிழ் மொழி ஒலிம்பியாட் போட்டித்தேர்வில்,கோவை ரத்தினபுரி மாநகராட்சிப் பள்ளி மாணவர் ஜெய் ஆகாஷ் மூன்றாம் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

தமிழகம் முழுவதும் கடந்த ஜனவரி 23 மற்றும் 24 ஆகிய தேதிகளில் நடைபெற்றஇந்தமாபெரும் தமிழ் ஒலிம்பியாட் போட்டியில், 1 முதல் 10-ஆம் வகுப்பு வரையிலான 1,300 மாணவர்கள் கலந்து கொண்டனர்.தமிழ்மொழித் திறன், இலக்கிய அறிவு மற்றும்இலக்கண அறிவை மேம்படுத்தும் நோக்கில் இப்போட்டி நடத்தப்பட்டது.

முதல்நிலைத் தேர்வு இணையவழியாகவும், இரண்டாம் நிலைத் தேர்வு தேர்வு மையங்களில் நேரடியாகவும் நடைபெற்றது.60நிமிடங்கள் கொண்ட பன்முகத் தேர்வாக நடத்தப்பட்ட இப்போட்டியில், மொழித் திறன் மற்றும் இலக்கிய அறிவுமுக்கியஅம்சங்களாக அமைந்திருந்தன.

இந்தப் போட்டியில் கலந்துகொண்ட ரத்தினபுரி மாநகராட்சிப் பள்ளியில் 5-ஆம் வகுப்பு பயிலும் மாணவர் ஜெய் ஆகாஷ், அனைத்து பிரிவுகளிலும் சிறப்பாகத் தேர்ச்சி பெற்று மாநில அளவில் மூன்றாம் இடம் பெற்றார். அவருக்கு வாகை தமிழ்ச் சங்கத்தின் சார்பில் “சிறந்த தமிழ் மாணவன்” விருது வழங்கப்பட்டது.

மாணவர் ஜெய் ஆகாஷ் மற்றும் அவருக்கு பயிற்சி அளித்த ஆசிரியர் மெர்பா ஜாஸ்மின் ஆகியோரை மாநகராட்சி ஆணையர் மா. சிவகுரு பிரபாகரன், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் பாராட்டினர்.

# பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தார் சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.ஜி.அருண்குமார்



தி கோவை ஹெரால்டு

கோவை மாவட்டம் கவுண்டம்பாளையம் தொகுதிக்கு உட்பட்ட பாலமலையில் உள்ள பெரும்பதி, பெருக்கம்பதி, மாங்குழி, பசுமணி ஆகிய பகுதிகளில் பேருந்து வசதி வேண்டியும், பெரியநாயக்கன்பாளையம் பகுதியில் உள்ள உதவி கோட்டப் பொறியாளர் அலுவலகத்தை கலைத்து வேறு இடங்களில் அமைப்பதால் சிறு குறு தொழில் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் சிரமப்படுவார்கள் என்பதால் இந்த திட்டத்தை கைவிடுமாறும்.

மேலும் கோவை விமான நிலைய விரிவாக்க பணிக்காக மாநகராட்சி 23 வார்டு பிருந்தாவன் நகர், பூங்கா நகர் பகுதி மக்கள் போக்குவரத்துக்காக அன்றாடம் பயன்படுத்தும் சாலையை ஆக்கிரமித்து விமான நிலைய சுற்று சுவர் அமைக்கும் பணி நடைபெறுவதால் மக்கள் அவதிப்படுகின்றனர்,

மேலும்பாதாளசாக்கடை சுத்திகரிப்பு நிலையமும் இந்த விரிவாக்க பணி நடைபெறும் பகுதிகள் வருவதால் இதை பார்வையிட்டு மக்கள் சிரமத்தை போக்குமாறும் கோரிகோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் கிரியப்பனவரிடம் கவுண்டம் பாளையம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் பி.ஆர். ஜி.அருண்குமார் மனு அளித்தார்.

# ஸ்வீடன் பெண் வேண்டும்... எப்ஸ்டினிடம் அனில் அம்பானி கேட்டரா?

பாலியல்குற்றவாளியானஜெஃப்ரி எப்ஸ்டீன் பைலில் இந்தியாவின் திவாலான தொழிலதிபரான அனில் அம்பானியின் பெயரும் அடிபடுகிறது. ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவரை தனக்கு ஏற்பாடு செய்து தரும்படி , அனில் அம்பானி கேட்டதாக தகவல் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது .

ஜெஃப்ரி எப்ஸ்டின் எனப்படும் அமெரிக்கர் ஓர் புரோக்கர். அரசியல் புரோக்கர், பொருளாதார புரோக்கர், பாலியல்புரோக்கராகசெயல்பட்டவர். மூன்றையும் ஒன்றுக்குள் ஒன்றாகப் புகுத்தி மிகப்பெரும் பணக்காரர் ஆனவர். எல்லாவற்றுக்கும் உச்சமாக, 18 வயதுக்குக் கீழான நூற்றுக்கணக்கான சிறுமிகளைத் தன்பாலியல்இச்சைக்குஆளாக்கிய ஒரு குற்றவாளி.

எப்ஸ்டின் தற்போது உயிரோடில்லை எனினும், அவர் சம்பந்தப்பட்ட போட்டோக்கள், விடியோக்கள், ஈமெயில்கள், ஆவணங்கள் அடங்கிய மிகப்பெரிய கோப்பு ஒன்று வெளியாகி உலகை அதிர வைத்துள்ளது. அதில், அமெரிக்கா, இங்கிலாந்து, சில ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்த அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள் பற்றிய குறிப்புகளும் உள்ளன. இந்தியாவின் பெயரும் இதில் அடிபடுகிறது.

சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும் அரசியல், பொருளாதார லாபங்களுக்காக அவரோடு தொடர்பிலிருந்தார்களா? அல்லது அவரது பாலியல் குற்றத்திலும் பங்குபெற்றார்களா?என்றுவிவாதமே ஏற்பட்டுள்ளது. அவரது, விர்ஜின் ஐலேண்ட் எனப்படும் தீவுக்கு யாரெல்லாம் வந்து போனார்கள்? அங்குஎன்னென்னவெல்லாம்குற்றச் செயல்கள் நடந்துகொண்டிருந்தன? அவற்றில் இவர்களுக்கெல்லாம் எந்தளவுக்குப் பங்கு இருந்தது? இதெல்லாம்தான் இப்போது எழுந்துள்ள கேள்விகள்.

1953ம் ஆண்டு அமெரிக்கா, நியூயார்க்கில் பிறந்த எப்ஸ்டின் கல்லூரிப்படிப்பைக்கூட முழுமையாக முடிக்காதவர். 1970களின் பிற்பகுதியில் ஒரு வங்கியில் பணியாற்றினார். இயல்பிலேயே, கவர்ச்சிகரமான பேச்சு, புத்திசாலித்தனம் போன்றவற்றால் சீக்கிரமாகவே முன்னேறி, 1980களின் தொடக்கத்திலேயே ஒரு நிதி மேலாண்மைநிறுவனத்தைதொடங்கி வளர்கிறார். கொஞ்சம் கொஞ்சமாக பெரும் பணக்காரர்களுக்கான பொருளாதார ஆலோசகராகப் பணியாற்றி, இவரும் மிகப்பெரிய



அளவில் வேகமாக வளர்கிறார். அமெரிக்க அதிபர்கள், இங்கிலாந்து அதிகார வர்க்கம், பிரபலமான தொழிலதிபர்கள், நடிகர்கள், அரசியல்வாதிகள் என மிகப்பெரிய மனிதர்களோடு அவருக்குப் பழக்கம் ஏற்படுகிறது. சொந்தமாக தனித்தீவுகள், தனி விமானங்கள், ஹெலிகாப்டர்கள், அமெரிக்காவின் பெரிய நகரங்கள்தோறும் பெரும் வீடுகள், அரண்மனைகள் என பணத்தில் கொழித்தார்.

இதையெல்லாம் சாதிப்பதற்கு அவர் பெண்களையும், பாலியல் தொழிலையும் பயன்படுத்திக்கொண்டிருந்தார். அவர்களில் சிறுமிகளும் உண்டு. பாதிக்கப்பட்ட சிறுமிகளின் எண்ணிக்கை நூற்றுக்கணக்கில் இருப்பது அதிர்ச்சியூட்டுகிறது. முதன்முறையாக பாலம் தீவில் 2005ல் அவரால் பாதிக்கப்பட்ட ஒரு சிறுமி போலீஸில் முறையிடுகிறாள். அப்போது எப்ஸ்டின் நினைத்துக் கூட பார்க்க முடியாத உயரத்திலிருக்கிறார். அதிகாரம் எனும்திரைமறைவுக்கரங்கள்அவரை காக்க, 2009ல் வெறும் 18 மாத சிறைத் தண்டனையோடு தப்பிவிடுகிறார். அதுவும் அடையாளச்சிறை! அதாவது வாரத்துக்கு 6 நாட்கள் அவர் தனது நிறுவனப் பணிகளுக்காக 12 மணி நேரம் வெளியே போய்விட்டு வரலாமாம். இரவில் தங்குவதற்காக மட்டும் சிறைக்கு வந்தால் போதுமானது. ஒரு பாலியல் குற்றவாளிக்கு இப்படி ஒரு தீர்ப்பு என்பது அநீதியின் உச்சமாகவே பார்க்கப்பட்டது.

இதற்கிடையே, எப்ஸ்டினால் பாதிக்கப்பட்ட வர்ஜீனியா லூயிஸ் ஜிஃப்ரே எனும் பெண், அவர் நிம்மதியாக உலவுவதை பார்க்கப் பொறுக்காமல் தவித்துக் கொண்டிருந்தார். 2015 வாக்கில் எப்ஸ்டினின் அனைத்துக் குற்றங்களிலும் உடனிருந்து உதவிய அவரது பெண் தோழியான கிலெயின் மேக்ஸ்வெல் எனும் பெண் மீது வழக்குத் தொடுக்கிறார். அப்போது களத்தில் இறங்கிய, ஜூலி.கே.பிரவுன் என்ற பெண் புலனாய்வுப் பத்திரிகையாளர், ’மியாமி ஹெரால்ட்’ பத்திரிகையில் ஜெஃப்ரி எப்ஸ்டினின் அத்தனைக் குற்றங்களையும், ஒரு தொடராகத் தோண்டித்துருவிஎடுத்துக்கொண்டு வந்து எழுதி விட்டார்.

இதையடுத்து, அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தர். தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன்னரே, 2919ம் ஆண்டு ஆகஸ்ட் 10ம் தேதி சிறையில் தற்கொலை செய்து கொண்டார். 2015ல் இவரது வழக்கில் ஆதாரமாகச் சேகரிக்கப்பட்ட ஆவணங்கள்தான் எப்ஸ்டின் ஃபைல்ஸ் எனப்படுகின்றன. கிட்டத்தட்ட 30 லட்சம் பைல்கள் வெளியாகியுள்ளதாக தகவல் உள்ளன. பில்கேட்ஸ், டொனால்ட் டிரம்ப், எலான் மஸ்க், பாலிவுட் நடிகர் அனுராக் காஷ்யப், இந்திய அமெரிக்க இயக்குநர் மீரா நாயர் ஆகியோர் பெயர்கள் எப்ஸ்டீன் பைலில் இடம் பெற்றுள்ளதாக சொல்லப்பட்டது. தற்போது, அனில் அம்பானி பெயரும் அடிபட தொடங்கியுள்ளது

ஒரு காலத்தில் செல்வாக்கு மிக்க தொழிலதிபராக இருந்த அனில் அம்பானி 2017 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து 2019 வரை எப்ஸ்டினுடன் தொடர்பில் இருந்ததாக எப்ஸ்டீன் பைலில் சொல்லப்பட்டுள்ளது. இருவரும் உலக விவகாரங்கள், வணிகம் மற்றும் பெண்கள் பற்றிப் பேசியுள்ளனர்.

மேலும் நேரில் சந்திக்கத் திட்டமிட்டனர். 2017ம் ஆண்டில், எப்ஸ்டின் புகழ்பெற்ற அம்பானி குடும்பத்தைப்பற்றியபலபுத்தகங்ளை ஆர்டர்செய்துபடித்துள்ளார். அனில் அம்பானிக்காக எப்ஸ்டீன், ஒரு உயரமான ஸ்வீடன் பெண்ணை ரெடி செய்துள்ளார் அதற்கு ஏற்பாடு செய்யும்படி அனில் அம்பானி கூறியதாகவும் தகவல் உள்ளது. ‘வயதானவர்களை விட இளம் பெண்களை நீங்கள் விரும்புவரை நான் வரவேற்கிறேன்’ என்று அனில் அம்பானியிடம் எப்ஸ்டின் சொன்னதாகவும் கூறப்படுகிறது. நியூயார்க் நகரின் மன்ஹட்டன் பகுதியில், எப்ஸ்டீனுக்கு சொந்தமான வீட்டில் அனில் அம்பானி நேரில் சந்தித்ததாகவும் சொல்கிறார்கள். இவையெல்லாம் எந்தளவுக்கு உண்மை என்று தெரியவில்லை. இந்தியாவின் மிகப் பெரிய தொழிலதிபரான அனில் அம்பானி , தற்போது வங்கிகளில் கடன் வாங்கி திவாலாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# காதலுக்காக 14 பேரை கொன்றாரா பிரபாகரன்?

## விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் விளக்கம்



தமது ஜாதி மறுப்பு காதலுக்காக 14 பேரை தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் சுட்டுக் கொன்றதாக தான் பேசியது தொடர்பாக விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் விளக்கம் அளித்துள்ளார்.

இது தொடர்பாக திருமாவளவன் கூறியுள்ளதாவது: அண்மையில் 23-01-2026 அன்று சென்னை தியாகராய நகரிலுள்ள சர் பிட்டி. தியாகராயர் அரங்கில், தந்தை பெரியார் திராவிடர் கழகம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் நான் பங்கேற்று உரையாற்றினேன். அப்போது, 'நிதர்சனம்' என்கிற ஊடக அமைப்பின் பொறுப்பாளர் தோழர் சத்தியமூர்த்தி என்கிற சேரலாதன் அவர்களுடன் ஒருநாள் அதிகாலையில் முல்லைத் தீவுப் பகுதியிலிருந்து கிளிநொச்சிக்கு இருசக்கர வண்டியில் சென்று அண்ணன் தமிழேந்தி அவர்களின் இல்லத்தில் அண்ணன் மேதகு பிரபாகரன் அவர்களைச் சந்தித்தேன். அப்போது, அவர் தமிழ்நாட்டில் திண்ணியம் என்னும் ஊரில் நடந்த சாதிய அவலம் குறித்து மிகுந்த வேதனையோடு தனது குமுறலை வெளிப்படுத்தினார். அத்துடன், தமிழீழத்தில் நிலவும் சாதியச் சிக்கல்கள் குறித்தும் தனது திருமணம் குறித்தும் மனம் திறந்து பேசினார்.

"இயக்கத்தில் சாதிய உணர்வுகளுக்கு இடமே இல்லை. இயக்க வளர்ச்சியின் போக்கில் முற்றாக அவை உதிர்ந்து போயின. ஆனால், சமூகத்தில் அவ்வப்போது சாதியச் சிக்கல்கள் எழும்போது உடனே இயக்கம் தலையிட்டு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. சில வேளைகளில் தேவையான சூழல்களில் இயக்கம் சாராத சிலருக்குத் தண்டனைகளும் வழங்கப்பட்டுள்ளன. தற்போதைய சூழலில் அத்தகைய நிலைமைகள் இயக்கத்தின் கட்டுக்குள் உள்ளன." என்று அண்ணன் பிரபாகரன் அவர்கள் என்னிடத்தில் கூறினார். இதனை அன்றைய கூட்டத்தில் நான் பேசும்நிலை தன்னியல்பாக நிகழ்ந்தது.

அண்ணன் பிரபாகரன் அவர்கள் பெரியாருக்கு எதிரானவர் இல்லையென்றும்; பெரியாரைப் போலவே சாதியச் சமூகக் கட்டமைப்புக்கு எதிரானவர் என்றும் விவரித்துப் பேசுவதே எனது முனைப்பாக இருந்தது. அதனையொட்டி அண்ணனின் சாதிமறுப்புத் திருமணம் பற்றியும், சாதிய சிக்கல்கள் தொடர்பாக இயக்கத்தின் சார்பில் எடுத்த நடவடிக்கைகள் குறித்தும் பேசினேன். ஆனால், அண்ணன் பிரபாகரன் அவர்கள் 'சாதியத்தை எதிர்த்தார்' என்பதற்கு மாறாக, 'காதலுக்காகத் தண்டனை வழங்கினார்' என பொருள்படும்படி எனது உரை அமைந்தது ஒரு பிறழ்வே தவிர வேறேதும் இல்லை. 'அண்ணன் பிரபாகரன் அவர்கள், பெரியாருக்கோ அவரது சமூகநீதி சிந்தனைகளுக்கோ எதிரானவர் இல்லை' என்று வலியுறுத்தவே நான் அண்ணன் அவர்களின் திருமணம் மற்றும் சாதியமைப்புக்கு எதிரான அவரது நடவடிக்கைகள் குறித்தும் பேசினேன். மற்றபடி, அவரது மகத்தான ஈகத்துக்கும் மாபெரும் வீரத்துக்கும் ஊறு விளைவிக்கும் நோக்கில் ஒருபோதும் நான் சிந்தித்ததுமில்லை; பேசியதுமில்லை.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# விருது பெற்ற ரோபோ சங்கர் பேரன்



கடந்தசில ஆண்டுகளாக வழங்கப்படாமல் இருந்த தமிழக அரசின் சினிமா விருதுகள் சமீபத்தில் அறிவிக்கப்பட்ட நிலையில், பிப்ரவரி 13 ம் தேதி விருதுகள் வழங்கப்பட்டது. இதில் மறைந்த நடிகர் ரோபோ சங்கருக்காக அவரது மனைவி மற்றும் மகள் விருதை பெற்றுக்கொண்டனர்.

திரைத்துறையில் சிறப்பான படங்களுக்கு ஆண்டுதோறும், மத்திய மற்றும் மாநில அரசு விருதுகள் வழங்குவது வழக்கம். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக தமிழக அரசின் மாநில விருது வழங்கப்படாமல் இருந்த நிலையில், அத்தனை ஆண்டுக்கும் சேர்த்து 2009-ம் ஆண்டு முதல் 2022-ம் ஆண்டு வரை வந்த படங்களுக்கு ஒட்டுமொத்தமாக விருதுகள் சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. இந்த விருதுகள் வழங்கும் விழா சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நட்சத்திரங்களுக்கு விருது வழங்கினார். அதில், 2009 முதல் 2012 வரை 183 பேருக்கும், 2009 முதல் 2013 சின்னத்திரை விருதுகள் 101 பேருக்கும், விருது வழங்கப்பட்டது.

அதேபோல், 2015 ஆம் ஆண்டுக்கான திரைப்பட விருதுகள் 34 பேருக்கும், வழங்கப்பட்து. இதில் திரைப்பட விருதுகளில் சிறந்த நடிகர்களாக சூர்யா, ஆர்யா, விக்ரம் பிரபு, விஜய்சேதுபதி, கார்த்தி, தனுஷ், பார்த்திபன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

சிறந்த நடிகைகளாக மஞ்சுவாரியார், அபர்ணா பாலமுரளி, லிஜோமோல் ஜோஸ், கீர்த்தி சுரேஷ், நயன்தாரா, ஜோதிகா, சாய்பல்லவி ஆகியோர் அறிவிக்கப்பட்டுள்ளனர். சிறந்த படங்களாக மாநகரம், அறம், பரியேறும் பெருமாள், அசுரன், கூழாங்கல், ஜெய்பீம், கார்கி ஆகியவை தேர்வு செய்யப்பட்டுள்ளன. வேலைன்னு வந்துட்டா வெள்ளைக்காரன் திரைப்படத்திற்காக சிறந்த நகைச்சுவை நடிகர் விருது மறைந்த நகைச்சுவை நடிகர் ரோபோ சங்கர்க்கு வழங்கப்பட்டது.


இந்த விருதை அவரது மனைவி பிரியங்கா சங்கர் தனது பேரனுடன் மேடைக்கு வந்து விருதை பெற்றுக்கொண்டார். அந்த சிறுவனின் கழுத்தில் உதயநிதி ஸ்டாலின் பதக்கத்தை அணிவித்த, பின்னர் ரோபோ சங்கருக்கான விருதை பிரியங்கா சங்கரிடம் வழங்கினார். என் கணவர் என் பேரன் வடிவில் எப்போதும் என் அருகில்தான் இருக்கிறார்" என்று பலமுறை பேசியிருக்கும் பிரியங்கா, அதே உணர்வோடு இந்த விழாவிலும் பேரனுடன் சேர்ந்து விருதைப் பெற்றது பலரையும் உருக்க வைத்தது.

# கோவையில் 'தொழிலாளர் சிலை' ஆட்சியர் பவன்குமார் திறந்து வைத்தார்



கோவை உப்பிலிபாளையம் கோர்ட் ரவுண்டானா பகுதியில் தொழிலாளர் சிலை தனியார் தொண்டு நிறுவனம் சார்பில் அமைக்கப்பட்ட இந்த சிலையை மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார், மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன் இணைந்து திறந்து வைத்தனர்.

# 10 நாட்களுக்கு ஒரு முறை நிலவுக்கு ராக்கெட் புறப்படும் – எலன் மஸ்க்



நிலவில் அமையவுள்ள நகரத்துக்கு 10 நாட்களுக்கு ஒருமுறை ராக்கெட் அனுப்ப திட்டமிட்டுள்ளதாக ஸ்பேஸ் எக்ஸ் தலைவர் எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம், நிலவில் தனி நகரத்தை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. செவ்வாய் கிரகத்தில் மனித குடியேற்றத்தை அமைப்பதை விட, நிலவில் ஒரு நகரத்தை" உருவாக்குவதே வேகமான மற்றும் யதார்த்தமானது என்று எக்ஸ் தளத்தில் இதுகுறித்துப் பதிவிட்டுள்ள எலான் மஸ்க், நிலவில் நகரம் அமைக்கும் பணியை பத்து ஆண்டுகளுக்குள் செய்து விட முடியும். செவ்வாய் கிரகத்தை விட நிலவு பூமிக்கு மிக அருகில் இருப்பதால், அங்கு அடிக்கடி விண்கலங்களை அனுப்ப முடியும். நிலவிற்கு செல்ல வெறும் 2 நாட்கள் மட்டுமே ஆகும்; ஆனால் செவ்வாய்க்கு செல்ல 6 மாதங்கள் தேவை . இதனால் நிலவில் நகரத்தை அமைக்க முன்னுரிமை அளிப்பட்டுள்ளது. நிலவிற்கு 10 நாட்களுக்கு ஒருமுறை விண்கலங்களை ஏவ முடியும். ஆனால் செவ்வாய் கிரகத்திற்கு 26 மாதங்களுக்கு ஒருமுறை மட்டுமே விண்கலங்களை அனுப்ப முடியும். இதனால், தொழில்நுட்ப ரீதியாக நிலவில் ஒரு நகரத்தை உருவாக்குவது மிகவும் எளிது என்று ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் கருதுகிறது.

இதுதொடர்பாக, எக்ஸ் பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ள ஸ்பேஸ் எக்ஸ் தலைவர் எலான் மஸ்க், செவ்வாய் கிரகத்துக்கு பதிலாக நிலவுக்கு முன்னுரிமை அளிப்பதே புத்திசாலித்தனமானது. 10 நாட்களுக்கு ஒரு முறை நிலவுக்கு ராக்கெட் ஏவி விட முடியும். அதேவேளையில், செவ்வாய் கிரகத்துக்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்தையும் தொடர்ந்து எங்கள் நிறுவனம் முயன்று கொண்டிருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

விண்வெளி வீரர்களை சந்திரனுக்குத் அனுப்பும் முயற்சிகளில் அமெரிக்காவுக்கு சீனாவிடமிருந்து போட்டி அதிகரித்துள்ளது. இந்த நிலையில்தான் நிலையில் இந்த அறிவிப்பு வந்துள்ளது. இதுவரை, நிலவுக்கு 6 முறை மனிதர்களை அமெரிக்கா அனுப்பியுள்ளது. 1969ம் ஆண்டு ஜூலை 21,ம் தேதி நீல் ஆம்ஸ்ட்ராங் நிலவில் முதன்முறையாக கால் பதித்தார். கடந்த 1972 ம் ஆண்டு அமெரிக்காவின் அப்பல்லோ 17 விண்கலம்தான் நிலவுக்கு கடைசியாக அனுப்பப்பட்ட விண்கலம். டிசம்பர் 7 ம் தேதி யூஜின் செர்னன், ஹாரிசன் ஷ்மிட், ரொனால்ட் எவான்ஸ் ஆகியோர் அந்த விண்கலத்தில் பயணம் செய்தனர். நிலவில் டாரஸ்-லிட்ரோ பள்ளத்தாக்கில் தரை இறங்கி, 3 நாட்கள் ஆய்வு மேற்கொண்டனர். நிலவில் 30 கி.மீ வரை ரோவரில் பயணம் செய்து 110 கிலோ பாறை மாதிரிகளை சேகரித்தனர். இந்த பயணத்திற்குப் பிறகு, மனிதர்கள் நிலவுக்கு பயணம் மேற்கொள்ளவில்லை. இதுவரை 12 விண்வெளி வீரர்கள் நிலவுக்கு சென்று வந்துள்ளனர். ஆனால், அதற்கு பிறகு 50 ஆண்டுகளாக நிலவுக்கு மனிதர்களை அனுப்பி வைக்கப்படவில்லை. தற்போது, நிலவுதான் எதிர்கால விண்வெளி ஆதிக்கத்திற்கான நுழைவாயிலாகக் கருதப்படுகிறது. தற்போது, சீனாவும் அமெரிக்காவுக்கு நிகராக தொழில்நுட்பத்தில் வளர்ச்சி பெற்றுள்ளதால், இரு நாடுகளும் நிலவில் ஆதிக்கம் செலுத்த முயன்று வருகின்றன. தற்போது, 'ஆர்ட்டெமிஸ் III' என்ற விண்கலத்தில் விண்வெளி வீரர்களை நிலவுக்கு அனுப்ப அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

# நடிகை விசித்ராவுக்கு என்ன ஆச்சு?



தமிழ் சினிமாவில் தனித்துவமான குணச்சித்திர நடிப்பால் ரசிகர்களை கவர்ந்த விசித்ரா, சமீபத்திய உடல்நலப் பிரச்சினை குறித்து வெளிப்படையாகப் பகிர்ந்து அனைவரையும் நெகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளார். பிக்பாஸ் நிகழ்ச்சிக்குப் பிறகு மீண்டும் கவனத்தை பெற்றிருந்த அவர், தற்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிக்பாஸ் தமிழ் சீசன் 7 மூலம் புதிய ரசிகர் பட்டாளத்தை பெற்ற நடிகை, சமீபத்தில் மூச்சுத் திணறல் பிரச்சினையால் அவதிப்பட்டதாக தெரிவித்துள்ளார். இதையடுத்து சென்னை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. மருத்துவமனையில் இருந்த புகைப்படங்களை அவர் தனது சமூகவலைதளத்தில் பகிர்ந்தது ரசிகர்களை அதிர்ச்சியடையச் செய்தது.

"வலி நம் வாழ்வைச் சற்றே நிறுத்தலாம்; ஆனால் அது மனதின் வலிமையை உணர்த்துகிறது. ஒவ்வொரு தழும்பும் ஒரு வெற்றிக் கதையே" என அவர் தனது இன்ஸ்டாகிராம் பதிவில் குறிப்பிட்டுள்ளார். டாக்டர் மொஹந்தி மற்றும் அவரது மருத்துவக் குழுவின் சிறப்பான சிகிச்சையால் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த கடினமான காலத்தில் தனக்கு உறுதுணையாக இருந்த கணவர், குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு அவர் நன்றி தெரிவித்துள்ளார். "அன்பும் ஆதரவும் இருந்தால் எந்த நோயையும் வெல்லலாம்" என்ற அவரது வார்த்தைகள் பலரையும் நெகிழ்ச்சியடையச் செய்துள்ளன.

தற்போது உடல்நலம் மேம்பட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில், ரசிகர்கள் சமூக வலைதளங்களில் விரைவான குணமடைவை வேண்டி வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.

# பண்ருட்டியாரின் எம்.ஜி.ஆர் கட்சி



பண்ருட்டியாரைப் பொறுத்தவரைக்கும் கடைசி காலத்துலயும் 'அரசியல்ல' பேசுபொருளா இருக்கனும்னு நினைப்பவர். ஓ. பன்னீர்செல்வத்தை தனிக்கட்சி தொடங்க வைக்கபோராடிப்பார்த்தார். பலன் கிடைக்கவில்லை. இதனால், தடுமாறிவிட்டார். இப்போது, அவருக்கும் திமுக, விஜய்னு ரெண்டு ஆப்ஷன் இருக்கு.. திமுக சைடுல எந்த மூவ்வும் பண்ணாம இருக்காரு..

ஆனா விஜய்கிட்ட மூவ் பண்ணியிருக்காரு பண்ருட்டியார். அதனால ஜேசிடி பிரபாகர் மூலமா பேசிகிட்டு இருக்காராம்.

பண்ருட்டியார் ஏற்கனவே MGR-ன்னு பெயர் வர்ற மாதிரி ஒரு கட்சியை பதிவு செஞ்சு வெச்சிருக்கார்.. Movement for Growth and Rights Party (MGR). அதுதான் MGR கட்சி.. அந்த கட்சி பெயரிலேயே விஜய் கூட கூட்டணி வெச்சுக்கலாம்னும் சொல்லிருக்காரு. விஜய் தரப்புல பதில் வரும்னு பண்ருட்டியாரும் காத்திருக்கிறாரு" என்கின்றனர். இது ஒருபுறம் இருந்தாலும், விஜய்யே ஒகே சொன்னாலும் பண்ருட்டியார் கிட்ட யாருமே இல்லையே.. 88 வயதில் பண்ருட்டியாரே போட்டியிடப் போறாரா? அல்லது விஜய்க்கு ஆதரவு என பிரசாரம் மட்டும் செய்ய போறாரா? இப்ப விஜய் கூட கூட்டணியில சேர்ந்துட்டு அப்புறமா MGR கட்சியையே தவெகவுல இணைச்சுட்டு கடைசிகாலத்தை 'அரசியல் ஆலோசகர்' 'அவைத் தலைவர்'னு ஓட்டிடலாம்னு நினைக்கிறாரா?ன்னு ஏகப்பட்ட கேள்விகள் எழுந்துள்ளதாம்.

# நேரு விமானவியல் மற்றும் பயன்பாட்டு அறிவியல் கல்லூரியில் 19-வது பட்டமளிப்பு விழா




கோவை குனியமுத்தூர் நேரு விமானவியல் மற்றும் பயன்பாட்டு அறிவியல் கல்லூரியில் இளங்கலை மற்றும் முதுகலைத் மாணவ, மாணவியருக்கான 19வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கோவை காருண்யா தொழில்நுட்ப நிறுவனத்தின் துணை வேந்தர் பேராசிரியர் முனைவர் ஆர்.எலையா பிளஸ்சிங் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பட்டங்களை வழங்கினார். நேரு கல்வி குழும நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் செயலாளர் முனைவர் பி. கிருஷ்ணகுமார் தலைமை தாங்கினார்.

நேரு கல்வி குழும நிறுவனங்களின் செயல் இயக்குநர் முனைவர் ஹெச். என். நாகராஜா வாழ்த்துரை வழங்கினார். மேலும் கல்லூரி முதல்வர் முனைவர் பி.ஆர்.பாலாஜி மற்றும் இளங்கலை மற்றும் முதுகலைத் துறைத் தலைவர்கள் முறையே சிங்காரவடிவேலு, முனைவர் மல்லிகா பங்கேற்று விழாவினை சிறப்பித்தனர்.

# அனைத்து துயரங்களிலும் இருந்து விடுபட சிவராத்திரியில் சிவனை வழிபடுங்கள்



2026ம் ஆண்டு மகா சிவராத்திரி தினம் பிப்ரவரி 15 ம் தேதி ஞாயிற்றுக் கிழமை கொண்டாடப்பட உள்ளது. இந்துக்களால் வெகு விமர்சையாக கொண்டாடப்படும் ஒரு முக்கிய திருநாள் சிவ ராத்திரி .

மகாசிவராத்திரி ஆன்மீகம் மற்றும் அறிவியல் முக்கியத்துவம் வாய்ந்தது. ஒவ்வொரு மாதமும் அமாவாசைக்கு ஒருநாள் முன்னதாகவரும் 14வதுநாள் மாத சிவராத்திரிஎன்று அழைக்கப்படுகிறது. ஒரு வருடத்தில் 12 முதல் 13 சிவராத்திரிகள் வரும். அவை அனைத்தையும் விட, மகாசிவராத்திரி என்று அழைக்கப்படும் மாசி மாதத்தில் வரும் சிவராத்திரி மிகவும் முக்கியமானது மற்றும் சிறப்பு வாய்ந்தது. ஆண்டுதோறும் மாசி மாதத்தில் வரும் கிருஷ்ணபட்ச (தேய்பிறை) சதுர்த்தசி திதியில் உலகம் முழுவதும் உள்ள இந்துக்களால் கொண்டாடப்படும் மகா சிவராத்திரி சிவனுக்குரிய விரதமாகும்.

உலகம் முழுவதும் உள்ள சிவாலயங்களில் பக்தர்களால் மகாசிவ ராத்திரி வெகு விமர்சையாக கொண்டாடப்படும்.

இந்தநாளில்சிவபக்தர்கள்விரதமிருந்து சிவபெருமானை துதித்து அன்றைய இரவு முழுவதும் கண்விழித்திருந்து இறைவனை வழிபாடு செய்வார்கள்.

முழு அர்ப்பணிப்புடன் சிவனைப் வழிபடும் ஒருவர், தனக்குள் அமைதியை உணர மகாசிவராத்திரி இரவில் தியானம் செய்ய வேண்டும்.

மகாசிவராத்திரி சிவபெருமானுக்கு அர்ப்பணிக்கப்பட்டது என்பதால் அன்று இரவில் கண்விழித்து மகாதேவனை வழிபடுபவர்கள் எல்லா துக்கங்களிலிருந்தும் விடுபடுவார்கள் என்பது நம்பிக்கை.

மேலும் அவர் தனது பக்தர்களின் அனைத்து விருப்பங்களையும் நிறைவேற்றுவார்.மகாசிவராத்திரியின் நேரடி அர்த்தம் ‘சிவனின் மகா இரவு’ என்பதாகும். மத நம்பிக்கைகளின் படி, மகாசிவராத்திரி விரதத்தைக் கடைப் பிடிப்பது திருமணமாகாத பெண்களுக்கு அவர்கள் விரும்பிய வாழ்க்கைத் துணை கிடைக்க ஆசீர்வதிக்கிறது மற்றும் திருமணமான பெண்களுக்கு திருமண வாழ்க்கையில் மகிழ்ச்சியை அளிக்கிறது.

சிவராத்திரியை முன்னிட்டு கோவையில் உள்ள கோயில்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகிறது.

வெள்ளியங்கிரி மலை, பேரூர் பட்டீஸ்வரன், கோட்டைமேடு சங்கமேஸ்வரர், காலகாலேஸ் வரர் கோயில் கோவில் பாளையம், மன்னீஸ்வரர் கோவில் அன்னூர், ஈஷா யோகா மையம் இடங்களில் சிவராத்திரி விழா இரவு முழுதும் நடைபெறுகிறது.

# ஒரே சாதிக்குள் திருமணம் செய்யும் ஆர்வம் குறைகிறதா?

## ஆய்வில் கிடைத்த முடிவு



இந்தியர்கள் தற்போது சராசரியாக திருமணம் செய்யும் வயது 27ல் இருந்து 29 ஆக உயர்ந்துள்ளது. சரியான பார்ட்னரை தேர்வு செய்வதில்தான் இந்தியர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். பணம் அல்லது வயது முக்கியமல்ல என்றும் ஆய்வுகள் தெரிவித்துள்ளது.


தற்போது, இந்தியர்களின் திருமணம் குறித்த பார்வை பல விதங்களில் மாற்றத்தை கண்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. இது குறித்து, மேட்ரிமோனி தளமான ஜீவன்சாதி சமீபத்தில் ஒரு ஆய்வு நடத்தியது. இந்த தளத்தில் 2106 முதல் 2025ம் ஆண்டு வரை உறுப்பினர்களாக உள்ளவர்கள். மற்றும் 2026ம் ஆண்டு ஆக்டிவ் உறுப்பினர்களாக உள்ள 30 ஆயிரம் பேரிடத்தில் நடத்தப்பட்டது .

இந்த ஆய்வில் ஒரே சாதிக்குள்தான் திருமணம் செய்ய வேண்டும் என்கிற எண்ணம் படிப்படியாக குறைய தொடங்கியுள்ளது என்று ஜீவன்சாதி அமைப்பு தெரிவித்துள்ளது. அதாவது, 2016ம் ஆண்டு 91 சதவிகிதம் பேர் ஒரே சாதிக்குள்தான் திருமணம் செய்ய வேண்டும் என்கிற கருத்தில் உறுதியாக இருந்தனர். 2025ம் ஆண்டு , அதுவே 54 சதவிகிதமாக குறைந்துள்ளது. நகரப்புறங்களில் 49 சதவிகிதம் பேர் சாதிமாறி திருமணம் செய்யும் மனநிலையில் உள்ளனராம். அதோடு, 8 சதவிகிதம் பேர் மட்டுமே பார்ட்னர்களில் யாராவது ஒருவர் சம்பாதித்தால் போதும் என்கிற மன நிலையில் உள்ளனர். 87 சதவிகித ஆண்கள், சம்பாதிக்கும் பெண்களை திருமணம் செய்வதை வசதியாக உணருகின்றனராம். 15 சதவிகித பெண்கள் , தங்களை விட குறைவாக சம்பாதிக்கும் ஆண்களை திருமணம் செய்ய தயாராக இருப்பதும் தெரிய வந்துள்ளது.

தொழில் மற்றும் நிரந்தர வருமானம் போன்ற காரணிகளால் இந்தியர்கள் திருமணம் செய்யும் சராசரி வயது கடந்த 10 ஆண்டுகளில் மாறியுள்ளது. அதாவது , 27ல் இருந்து 29வயதில்தான் தங்களுக்கு பார்ட்னர்களை தேட தொடங்குகின்றனர். திருமண முடிவுகளை பெற்றோரை விட இளைஞர்களே தனிப்பட்ட முறையில் எடுக்கின்றனராம். இதனால், இளைஞர்களே தற்போது மெட்ரிமோனி தளங்களில் தங்களைப் பற்றி விவரங்களை பதிவு செய்கின்றனராம். கடந்த 2016ம் ஆண்டு 67 சதவிகிதம் பேர் தனிப்பட்ட விவரங்களை பதிவு செய்தனர். தற்போது 77 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. அதேவேளையில், தாங்கள் முடிவெடுத்தாலும் பெற்றோர் உதவியுடன் ஆதரவுடன்தான் திருமணத்தை எளிதாக நடத்த முடிவதாக இளைஞர்கள் நம்புகின்றனராம். 90 சதவிகிதம் பேர் பணம் மற்றும் வயதுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. சரியான நபரை தேர்வு செய்வதே முக்கியம் என்கின்றனராம். பெற்றோரை விட உடன்பிறந்தவர்களே திருமணம் செய்து வைப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டுவதும் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2016ம் ஆண்டு விவாகரத்து செய்தவர்களில் 11 சதவிகிதம் பேரே இரண்டாம் திருமணம் செய்து கொள்வதில் ஆர்வம் காட்டியுள்ளனர். 2025ம் ஆண்டு 16 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. விவகாரத்து செய்தவர்களை திருமணம் செய்ய முதல் முறையாக திருமணம் செய்யும் 15 சதவிகிதம் பேர் ஆர்வம் காட்டுவதும் ஆய்வில் தெரிய வந்துள்ளது. மேட்ரிமோனி தளங்களில் தங்கள் பெயரை பதிவு செய்த 6 மாதங்களுக்குள் திருமணம் செய்ய 78 சதவிகிதம் பேர் விரும்புகின்றனர். 48 சதவிகிதம் பேர் 3 மாதங்களுக்குள் திருமணம் செய்ய முடிவு செய்கின்றனர்.

# வடகொரிய அதிபராகும் சிறுமி?



வடகொரியாவின் அதிபராக இருப்பவர் கிம் ஜாங் உன். அனுகுண்டுகளை கூட பட்டாசு போல சோதித்து பார்க்கும் சர்வாதிகாரி. இதனால், பக்கத்து நாடான தென் கொரியாவுக்கு எப்போதும் வடகொரியாமீது ஒருகண்டு உண்டு. தென்கொரிய உளவுத்துறைக்கு வட கொரியாவை உளவு பார்ப்பதுதான் உலகத்திலேயே முதன்மையான வேலை.

‘வட கொரிய அதிபர் கிம்ஜாங் உன்னுக்கு உடல் நலம் சரியில்லை. விரைவில் இறந்து விடுவார் ’என்றெல்லாம் வதந்திகளை அவ்வப்போது தென்கொரிய உளவுத்துறை பரப்பி விடும். ஆனால், அதே வேளையில், கிம் ஜாங் உன் தனது பிரத்யேக ரயிலில் ரஷ்யாவுக்கு பயணித்துக் கொண்டிருப்பார். ஏனென்றால் , பாதுகாப்பு காரணங்களுக்காக அவர் விமானத்தில் செல்வதே இல்லை. வெளிநாடு ஒன்றுக்கு பயணப்பட்டார் என்றால் அது, ரஷ்யா அல்லது சீனா மட்டும்தான். அமெரிக்க அதிபர் டிரம்ப் கூட, தென்கொரிய எல்லையில் வைத்துதான் வட கொரிய அதிபரை சந்தித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இப்படி ,விசித்திரமான செயல்பாடு கொண்ட ஒரு அதிபர்தான் கிம் ஜாங் உன். தற்போது, கிம் ஜாங் உன் தனக்கு பிறகு, தனது மகளை வட கொரிய அதிபராக்க முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

முன்னதாக, கிம் ஜாங் உன்னின் சகோதரி கிம் யோ ஜாங் வடகொரிய அதிபர் ஆவார் என்று சொல்லப்பட்டது. கிம் யோ ஜாங் தற்போது கொரிய தொழிலாளர் கட்சியின் மத்திய குழுவில் முக்கிய பதவியை வகிக்கிறார். இவரும், தன் சகோதரருடன் அரசியல் பயணங்கள் மேற்கொள்வது உண்டு.

தென் கொரியாவின் அதிகாரப்பூர்வ செய்தி நிறுவனமான யோன்ஹாப் வெளியிட்டுள்ள தகவலின்படி , தனக்கு பிறகு தனது மகள் கிம் ஜூ ஏவை அதிபராக்க முடிவு செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. வடகொரிய அதிபரின் பல அரசியல் நிகழ்ச்சிகளில் கிம் ஜூ ஏ கலந்து கொள்கிறார். கடந்த 2025ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் கிம் ஜாங் உன் சீனாவுக்கு சென்றிருந்தார். அப்போது, அவரது மகளும் உடன் சென்றிருந்தார். அதேபோல, சீனம் மற்றும் ரஷ்ய தலைவர்களுடன் கிம் ஜாங் உன் சந்தித்த போதும் மகள் உடனிருந்தார். தனது மகளை அடுத்த அதிபராக்கும் நோக்கத்துடன்தான், கிம்ஜாங் உன் அரசியல் நிகழ்ச்சிகளுக்கு கிம் ஜூ ஏவை உடன் அழைத்து வருவதாகவும் சொல்கிறார்கள். அதுமட்டுமல், ஏவுகணை சோதனைகள் நடத்தும் போதும் மகளை கிம் ஜாங் உன் அழைத்துசெல்கிறார். வடகொரியாவின் மிகுந்த மதிப்புக்குரிய குழந்தை என்று கிம் ஜாங் உன் தனது மகளை பற்றி கருதுகிறாராம்.

தற்போது, கிம் ஜூ ஏவுக்கும் 13 வயதே இருக்கலாம் என்றும் சொல்லப்படுகிறது. கிம் ஜாங் உன் மற்றும் அவரது மனைவி ரி சோல் ஜூ தம்பதிக்கு ஒரு மூத்த மகனும் உண்டாம்.ஆனால், பொது வெளியில் அவர் தென்பட்டதே இல்லையாம். கடந்த 2013ம் ஆண்டு அமெரிக்க கூடைப்பந்து வீரர் டென்னிஸ் ராட்மேன், வடகொரியாவுக்கு சென்றார். அப்போது, வடகொரிய அதிபர் கிம் ஜாங்கையும் சந்தித்தார். இந்த தருணத்தில், குழந்தையாக இருந்த கிம் ஜூ ஏ- வுடன் அவர் புகைப்படம் எடுத்துக் கொண்டார். இந்த புகைப்படம்தான் கிம் ஜூ ஏ- வை வெளி உலகுக்கு அறிமுகப்படுத்தியது. ஒரு வேளை, கிம் ஜூ ஏ வட கொரிய அதிபராக்கப்ட்டால், நாட்டில் மாற்றங்கள் ஏற்படுமா? என்றெல்லாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# கோவையில் பள்ளிவாசல்கள் ரமலான் நோன்புக்கான பச்சரிசி பட்டியல் சமர்ப்பிக்க மாவட்ட ஆட்சியர் அறிவுரை

கோவையில் ரமலான் மாத நோன்பை முன்னிட்டு நோன்பு கஞ்சி தயாரிக்க தேவையான பச்சரிசி விநியோகத்திற்காக, பள்ளிவாசல் நிர்வாகங்கள் தங்களது தேவைப்பட்டியலை சமர்ப்பிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் அறிவுறுத்தியுள்ளார்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் ரமலான் நோன்பு கடைப்பிடிக்கும் இஸ்லாமிய மக்களுக்காக, ஒவ்வொரு ஆண்டும் ரமலான் மாதத்தில் நோன்பு கஞ்சி தயாரிக்க தமிழக அரசு பள்ளிவாசல்களுக்கு பச்சரிசி வழங்கி வருகிறது. கடந்த ஆண்டுகளைப் போலவே 2026ஆம் ஆண்டிலும் அரிசி வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகள் இஸ்லாமிய மக்களிடமிருந்து வரப்பெற்றுள்ளன.

இதனையடுத்து, கடந்த ஆண்டு மொத்த அனுமதியின் கீழ் பச்சரிசி பெற்ற பள்ளிவாசல்கள், 2026ஆம் ஆண்டு ரமலான் மாதத்திற்கான தேவையை குறிப்பிட்டு தங்களது பட்டியலை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, உரிய விவரங்களுடன் தேவைப்பட்டியலை கோயம்புத்தூர் மாவட்ட வழங்கல் அலுவலகத்தில் உடனடியாக சமர்ப்பிக்க பள்ளிவாசல் நிர்வாகத்தினர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

# உயிரைக் கொடுத்து 5 பேருக்கு மறுவாழ்வு கொடுத்த 10 மாத குழந்தை

கேரள மாநிலம் கோட்டயத்தில் கடந்த பிப்ரவரி 5ம் தேதி மதியம் 2.30 மணி. காரில் தனது தாத்தா, பாட்டி ஆகியோருடன் அம்மா மடியில் அமர்ந்து பயணித்துக் கொண்டிருந்தது ஒரு 10 மாத பெண் குழந்தை. அந்த குழந்தையின் பெயர் அலின் ஷெரின் ஆபிரஹாம். காரை தாத்தா ஓட்ட, எம்.சி சாலையில் கார் சென்றுக் கொண்டிருந்தது. இந்த சமயத்தில் எதிரே வந்த கார், குழந்தை பயணித்த கார் மீது மோதியது. இந்த விபத்தில் குழந்தை படுகாயமுற்றது. தொடர்ந்து, சங்கனாச்சேரி மற்றும் திருவல்லாவில் உள்ள மருத்துவமனைகளில் குழந்தைக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர், மேல்சிகிச்சைக்காக கொச்சியிலுள்ள அமிர்தா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். ஆனாலும், டாக்டர்கள் எவ்வளவோ போராடியும் குழந்தையை காப்பாற்ற முடியவில்லை. கடந்த புதன்கிழமை (பிப் 13ம் தேதி )அலின் மூளைச்சாவை சந்தித்தது. குழந்தையைபறிகொடுத்த பெற்றோர் கதறினர். எனினும், இந்த தருணத்தில் பெற்றோருக்கு ஆறுதல் கூறிய, மருத்துவர்கள் உறுப்புகளை தானம் செய்வது குறித்து பேசினார்கள். பெற்றோர் ஒப்புக் கொள்ளவே குழந்தையின் இதயம், கிட்னி, கல்லீரல், கண்கள் போன்றவை தானமாக பெறப்பட்டு திருவனந்தபுரத்திலுள்ள 4 மருத்துவமனைகளுக்கு மின்னல் வேகத்தில் அனுப்பி வைக்கப்பட்டது.

# 35 ஆண்டுகளுக்கு பிறகு, வங்கதேசத்தில் பிரதமராக ஒரு ஆண்



வழக்கமாக முதன்முறையாக பெண் ஒருவர் பிரதமராகியுள்ளார் அல்லது ஆட்சியை பிடித்துள்ளார் என்றுதான் செய்திகள் வரும். தற்போது, முதன்முறையாக ஆண் ஒருவர் ஆட்சியை பிடித்துள்ளார். அதுவும், 35 ஆண்டுகளுக்கு பிறகு என்று வங்கதேசத்தில் இருந்து தகவல் வந்துள்ளது.

இந்தியாவின் அண்டை நாடான வங்கதேசத்தில் 13வது பொது தேர்தல் நடைபெற்றது. இதில், கலிதா ஜியாவின் வங்கதேச தேசிய கட்சி வெற்றி பெற்று ஆட்சியை பிடித்துள்ளது. கலிதா ஜியா கடந்த டிசம்பர் மாதத்தில் காலமானார். இதையடுத்து, வெளிநாட்டில் வசித்துவந்த கலிதா ஜியாவின் மகன் தாரிக் ரஹ்மான் தாய்நாடு திரும்பி கட்சித் தலைவராக பொறுப்பேற்றார். இந்த தேர்தலில் டாகா 7 மற்றும் பொகுரா 6 ஆகிய தொகுதிகளில் போட்டியிட்டு இரு தொகுதிகளிலுமே வெற்றி பெற்றார். 2018 ஆம் ஆண்டு தனது தாயார் சிறையில் அடைக்கப்பட்டதிலிருந்து ரஹ்மான் கட்சியின் செயல் தலைவராக இருந்தார். வங்கதேசத்தின் மற்றொரு பெண் அரசியல் தலைவரான ஷேக் ஹசீனாவை கொலைசெய்ய திட்டம் தீட்டியத உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் இவர் மீது நிலுவையில் உள்ளன.. எனினும், கடந்த 2008 ஆம் ஆண்டு மருத்துவ சிகிச்சைக்காக லண்டனுக்கு குடிபெயர்ந்த அவர், அங்கேயே வாழ்ந்து வந்தார். கடந்த 2024ம் ஆண்டு ஷேக் ஹசீனா ஆட்சி முடிவுக்கு வந்ததும், 17 ஆண்டுகளுக்கு பிறகு அவர் தாய்நாடு திரும்பினார்.

வங்கதேச தேசிய கட்சியை தாரின் ரஹ்மானின் தாத்தாவும் கலிதா ஜியாவின் தந்தையுமான ஜியாவூர் ரஹ்மான் தோற்றுவித்தார். 1981ம் ஆண்டு நடந்த ராணுவப்புரட்சியின் போது, அவர் கொல்லப்படவே கலிதா ஜியா அரசிலுக்குள் நுழைந்தார். 1991ம் ஆண்டு முதன்முறையாக வங்கதேச பிரதமருமானார். வங்க தேசத்தை பொறுத்த வரை, கடந்த 1988 முதல் 90ம் ஆண்டு வரை, காஷி ஜாப்பர் அகமது என்பவர் பிரதமராக இருந்தார். இவர்தான் , அந்த நாட்டின் கடைசி ஆண் பிரதமர். தொடர்ந்து, கலீதா 1991ம் ஆண்டு வங்கதேசத்தில் பிரதமராக ஆனார். பின்னர், ஷேக் ஹசீனா இருந்தார். இவர்கள் இருவரும் கிட்டத்தட்ட 35 ஆண்டுகள் அந்த நாட்டில் ஆட்சியில் இருந்தனர்.

# ஏழாவது முறையாக கோப்பையை கைப்பற்றிய கோவை மாவட்ட கூடைப்பந்து வீராங்கனைகள் சாதனை


திகோவை ஹெரால்டு




தமிழ்நாடு கூடைப்பந்து கழகம் சார்பாக மாநில அளவிலான ஜூனியர் பிரிவு மகளிர் கூடைப்பந்து போட்டிகள் திருச்சி மாவட்டம் கொங்கு கல்லூரியில் நடைபெற்றது. இந்தப் போட்டி தொடரில் தமிழ்நாட்டிலுள்ள 40 மாவட்டங்களைச் சேர்ந்த அணிகள் பங்கு பெற்று பலப்பரீட்சை நடத்தினர். இந்தப் போட்டி தொடரில் கோவை மாவட்ட கூடைப்பந்து அணி இறுதிப் போட்டியில் தூத்துக்குடி மாவட்ட அணியை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றது. இந்த வெற்றியின் மூலம் தொடர்ச்சியாக ஆறு முறை கோப்பையை வென்று சாதனை படைத்தது. வெற்றி பெற்ற கோவை மாவட்ட அணி வீராங்கனைகளுக்கும் மற்றும் பயிற்சியாளர்களுக்கும் கோவை மாவட்ட கூடைப்பந்து சங்க தலைவர் செல்வராஜ், செயலர் பாலாஜி ஆகியோர் பாராட்டி வாழ்த்தினர்.

# விலையில்லா வீடு முதல் இலவச இருசக்கர வாகனம் வரை...
# அதிமுக வாக்குறுதிகளை பட்டியலிட்டு எஸ்.பி.வேலுமணி பேச்சு

தி கோவை ஹெரால்டு




கோவை புறநகர் தெற்கு மாவட்டம் கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதிக்குட் பட்ட சுந்தராபுரத்தில் அதிமுக சார்பில் முன்னாள் முதல்வர்கள் எம்ஜி. ஆர், ஜெயலலிதா, எடப்பாடி பழனிச்சாமி ஆகியோரின் பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது . விழாவில்

முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி மற்றும் செ.தாமோதரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எட்டிமடை ஏ.சண்முகம் மதுக்கரை நகர செயலாளர் கே. சண்முகராஜா ஆகியோர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை மற்றும் 1000கும் மேற்பட்ட பெண்களுக்கு சேலைகள், வழங்கினார்

விழாவில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி வேலுமணி பேசுகையில், திமுகவினருக்கு அதிமுக மீது எந்த குறையும் சொல்ல முடியாததால் அதிமுக பாஜக கூட்டணியை விமர்சிக்கிறார்கள். கோவையில் அதிமுக ஆட்சியில் மெட்ரோரயில் திட்டத்திற்கு பிரதமர் நரேந்திர மோடி நிதி ஒதுக்கினார். சரியான திட்ட அறிக்கை கூட தயார் செய்து திமுக அரசால் அனுப்ப முடியவில்லை. பொள்ளாச்சி சாலை, கோவை ஆத்துப்பாலம் மேம்பாலம் , அவினாசி சாலை மேம்பாலம் என கழக ஆட்சிக் காலத்தில் எண்ணற்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டது.

கோவை மாவட்டத்திற்கு என்னென்ன திட்டங்கள் தேவையோ... அத்தனை திட்டங் களையும் பார்த்து பார்த்து நிறை வேற்றினோம். ஒரே வருடத்தில் 6 அரசு கலைக் கல்லூரிகளை கொண்டு வந்தோம். தாலுகா அலுவலகங்கள் அமைக்கப் பட்டது. பேரூர் படித்துறை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. 30 ஆண்டுகால விவசாயிகளின் பிரச்சினை,அவினாசி அத்திக்கடவு திட்டத்தை செயல்படுத்திக் காட்டியுள்ளோம்.

தற்போது, ஒவ்வொரு வீட்டின் பொருளாதாரத்தையும் உயர்த்தக்கூடிய வகையில் மகளிருக்கு மாதந்தோறும் ரூ.2000 வழங்கப்படும் என்று எடப்பாடியார் அறிவித்துள்ளார். இரண்டாம் கட்டமாக முதியோர் உதவித்தொகை 2000 ஆக உயர்த்தப்படும். ஆண்களுக்கும் நகரப் பேருந்துகளில் கட்டணமில்லா பயணத் திட்டம் செயல்படுத்தப்படும். ஏழை எளிய நடுத்தர மக்களின் பெரும் கனவான 'சொந்த வீடு' திட்டத்தை நிறைவேற்ற எடப்பாடிளார் திட்டமிட்டுள்ளார். அரசே இடம் வாங்கி கிராமப்புரங்களில் கான்கிரீட் வீடும் நகர்ப்புறத்தில் அடுக்குமாடி வீடும் கட்டித் தரும் திட்டம் உள்ளது. இதன் மூலம் விலையில்லா வீடுகள் வழங்கப்படும். அதைப்போலவே, ஒரே குடும்பத்தில், மகன்கள் திருமணமாகி தனிக்குடித்தனம் செல்கிற போது, எங்கள் அரசே இடம் வாங்கி அவர்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டித் தரும். அதிமுக வின் கோரிக்கையை ஏற்று 100 நாள் வேலைத்திட்டம் 125 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த வேலைநாட்கள் 130 நாட்களாக உயர்த்தப்படும். வேலைக்குசெல்லும் பெண்களின் சுதந்திரத்தை உறுதி செய்திட 5 லட்சம் மகளிருக்கு 'மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம்' செயல்படுத்தப்படும் என்றும் எடப்பாடியார் அறிவித்துள்ளார்.

வங்கிகளில் பெற்ற கல்விக் கடன் தள்ளுபடி, வீரர்கள் உயிரிழக்கநேரிட்டால் அவர்களது குடும்பத்தினருக்கு ரூ.10 லட்சம் நிதியுதவி மற்றும் சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த மகளிர் சுயதொழில் தொடங்குவதற்கு வட்டியில்லா கடன், மாற்றுத் திறனாளிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடன் தள்ளுபடி போன்ற திட்டங்களும் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தனை திட்டங்களையும் எடப்பாடியார் நிச்சயம் நிறைவேற்றுவார். விரைவில் அதிமுக ஆட்சி அமைவது உறுதி என்றார்.

விழாவில் கழக வழக்கறிஞர் பிரிவு துணைச் செயலாளர்கள் கே.தாமோதரன், ஐ. கணேசன், மருத்துவ அணி மாவட்ட செயலாளர் டாக்டர் ஆர். சௌந்திரவேல் ,பாரதிய ஜனதா கட்சி மாவட்ட செயலாளர் சந்திரசேகர், வசந்தராஜன் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## விஜய் என் நண்பர்தான், அதற்காக?
## எஸ்.பி.வேலுமணி காட்டம்

கோவை மாவட்டம், தொண்டாமுத்தூர் தொகுதியில் நடைபெற்ற அதிமுக கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி வேலுமணி பேசும்போது, "புதிதாக சிலர் கட்சி தொடங்கியுள்ளனர். யார் வேண்டுமானால் கட்சி தொடங்கலாம். விஜய்யை பார்ப்பதற்காக அவரின் கட்சியினர் ஏராளமானோர் கரூர் வந்தனர். விஜய் கண் முன்னரே 41 மக்கள் கொத்து கொத்தாக விழுந்து இறந்தனர். விஜய் எதுவும் செய்யாமல் சென்னை ஓடினார். இப்போது வரை கரூர் செல்லவில்லை. அதிமுகவில் சாதாரண ஒரு தொண்டருக்கு அடிபட்டால் கூட உடனடியாக சென்று பார்க்கிறோம். கரூரில் இருந்து சென்னை ஓடிய விஜய் ஒரு மாதம் தன்னுடைய வீட்டை விட்டு வெளியில் வரவில்லை. அவரை ஆதரிக்கலாமா. விஜய் எனக்கு நண்பர்தான். ஆனால் இது சினிமா இல்லை. சினிமாவில் கேமரா முன்பு நடித்து செல்வது போல, விஜய் கரூர் சம்பவத்தையும் அணுகியுள்ளார் அவருக்கு வாக்களித்து திமுகவுக்கு வாய்ப்பு கொடுத்து விட வேண்டாம்" என்றார்.

## எஜமானரின் குழந்தையை காப்பாற்றிய பூனை





இணையத்தில் வேகமாக பரவி வரும் ஒரு வைரல் வீடியோ பலரையும் அதிர்ச்சியிலும் நெகிழ்ச்சியிலும் ஆழ்த்தியுள்ளது. பச்சைக் குழந்தை ஒன்று அறியாமையால் ஆபத்தான சூழ்நிலைக்கு தள்ளப்பட்ட அந்த தருணத்தில், வீட்டில் வளர்க்கப்படும் செல்லப் பூனை காட்டிய துணிச்சல் தற்போது அனைவரின் பாராட்டையும் பெற்று வருகிறது.

வீட்டின் முன் தரையில் ஊர்ந்து வந்த பாம்பை, அது ஆபத்தானது என்பதை அறியாத அந்த பிஞ்சு குழந்தை, பொம்மை என நினைத்து தொட முயல்கிறது. அந்தக் கணத்தில் குழந்தைக்கு நேரக்கூடிய ஆபத்தை நினைத்தாலே காண்போரின் இதயம் பதற வைத்தது.

அந்த நேரத்தில் வீட்டில் முன் இருந்த செல்லப் பூனை திடீரென மின்னல் வேகத்தில் ஓடிவந்து, பாம்பைத் தடுத்து தாக்குகிறது. பாம்பை கடித்து இழுத்துச் சென்று, விட்டது. தன் எஜமானரின் குழந்தைக்கு ஆபத்து ஏற்படாதபடி செயல்பட்ட பூனையின் இந்த துணிச்சல் செயல் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

தன் உயிரையும் பொருட்படுத்தாமல் குழந்தையை காப்பாற்றிய இந்த சம்பவம், விலங்குகளின் நன்றியுணர்வுக்கும் விசுவாசத்திற்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக பார்க்கப்படுகிறது. சமூக வலைதளங்களில் ஆயிரக்கணக்கானோர் இந்த வீடியோவை பகிர்ந்து, பூனையின் வீரத்தை பாராட்டி வருகின்றனர்.

# திரிஷாவை இழுத்த நயினார்...
# தமிழச்சி தங்கபாண்டியன் விமர்சனம்







தமிழக பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், தவெக தலைவர் விஜய் குறித்து செய்தியாளர்களிடம் பேசியபோது சர்ச்சைக் குரிய கருத்துகளை தெரிவித்துள்ளார்.

விஜய் அரசியலில் அனுபவமற்றவர் என்றும், முதலில் வீட்டை விட்டு வெளியே வர வேண்டும் என்றும் அவர் கூறினார். குறிப்பாக, ஒரு நடிகையின் (திரிஷா) பெயரை குறிப்பிட்டு, "திரிஷாவிடம் இருந்து வெளியே வந்தால் தான் எல்லாமே நடக்கும்" என்று கூறியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

விஜய் ஒரு இடத்தில் கூட வெற்றி பெற மாட்டார் என்றும், அவருக்கு களத்தில் அடிப்படை அமைப்பு இல்லை என்றும் நயினார் நாகேந்திரன் கடுமையாக விமர்சித்தார். இந்த கருத்துகள் அரசியல் வட்டாரத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன. நடிகர் விஜய்யின் தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் பெண் ஒருவரை இழுத்து அரசியல் விமர்சனம் செய்தது தகாதது என்ற விமர் சனங்கள் எழுந்துள்ளன.

இது தேர்தல் களத்தில் பாஜகவுக்கு எதிரான எதிர்மறை பிம்பத்தை உருவாக்கும் என்று அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர். திமுக எம்பி தமிழச்சி தங்கபாண்டியன் இதற்கு கடும் கண்டனம் தெரி வித்துள்ளார். இந்தியாவை ஆளும்கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர், அரசியல் கருத்துகளைச் சொல்லும்போது பொதுவெளியில் பயணிக்கும் பெண்ணைப் பற்றி அவதூறாகப் பேசுவது அழகல்ல என்று அவர் தெரிவித்தார்.

பெண்களைக் கண்ணி யத்துடன் பேசுவதும், நடத்துவதுமே நாகரீக அரசியல் என்றும் அவர் வலியுறுத்தினார். தமிழச்சி தங்கபாண்டியனின் கண்டனம் சமூக வலைதளங்களிலும் ஊடகங்களிலும் பரவலாக பேசப்படுகிறது.

# மத்திய விமான போக்குவரத்து இணை அமைச்சர் முரளிதர் மோவால்
# கோவை விமான நிலையத்தில் அதிகாரிகளுடன் ஆலோசனை



கோவை விமான நிலைய விரிவாக்கத் திட்ட பணிகள் குறித்து மத்திய சிவில் விமான போக்குவரத்துத்துறை இணை அமைச்சர் முரளிதர் மோவால் கோவை விமான நிலைய அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

கோவை விமான நிலையத்தின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு கடந்த 2010 திமுக ஆட்சியில் 627 ஏக்கரில் விரிவாக்க திட்டம் அறிவிக்கப்பட்டது. பத்தாண்டுகளுக்குப் பிறகு திமுக ஆட்சி பொறுப்பேற்ற பின் நிலம் கையகப்படுத்தும் பணிகளுக்கு 2,500 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிலங்கள் அனைத்தும் நிபந் தனையின்றி இந்திய விமான நிலைய ஆணையகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக சுற்றுச்சூழல் அமைக்கும் பணி நடந்து வருகிறது. புதிய வருகை, புறப்பாடு பகுதிக்கு பிரம்மாண்டமான டெர்மினல் கட்டிடம் அமைப்பதற்கான டிசைன் வடிவமைக்கப்பட்டு டெல்லி தலைமையக அலுவல கத்திற்கு ஒப்புதலுக் காக அனுப்பி வைக்கப்பட்டுள் ளது. இத்தகைய சூழலில் மத்திய சிவில் விமான போக்குவரத்துத்துறை இணை அமைச்சர் முரளிதர் மோவால் கோவை விமான நிலையத்திற்கு ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வருகை புரிந்தார்.

இதுகுறித்து விமான நிலைய அதிகாரிகள் கூறும் போது, மத்திய சிவில் விமான போக்குவரத்து துறை இணை அமைச்சர் முரளிதர் மோவால் பிப்ரவரி 8-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கோவை வந்தார் தொடர்ந்து கட்சி நிகழ்ச்சியில் பங்கேற்க புறப்பட்டு சென்றார். மீண்டும் மாலை கோவை திரும்பினார். விமான நிலைய வளாகத்தில் அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து விமான நிலைய இயக்குனர் முகமது ஆரிப், விமான நிலைய உதவி பொது மேலாளர் சரவணன் உள்ளிட்ட அதிகாரிகளுடன் கோவை விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் விரிவாக்கத் திட்டத்தின் நிலை குறித்து கேட்டறிந்தார்.

அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்தும், தேவைப்படும் உதவிகள் குறித்து அதிகாரிகள் இணை அமைச்சரிடம் தெரிவித்தனர். கோவை விமான நிலைய விரிவாக்கத் திட்டப் பணிகளுக்கு தேவையான உதவிகள் செய்து தரப்படும் என இணை அமைச்சர் உறுதி அளித்த பின் புறப்பட்டு சென்றார்.

# இந்தியாவில் மார்ஸ் குழுமத்தின் பெட் நியூட்ரிஷன் தொழில்பிரிவின் நிர்வாக இயக்குநராக மனிஷ் சியாக் நியமனம்



மார்ஸ் இன்கார்ப் பரேட்டட் நிறுவனம், இந்தியாவில் செல்லப் பிராணி களுக்கான ஊட்டச் சத்து பிரிவின் நிர்வாக இயக்குநராக .

மனிஷ்சியாக்நியமனம் செய்யப்பட்டிருப்பதை இன்று அறிவித்துள்ளது. பெடிகிரி, விஸ்காஸ், ஷீபா போன்ற செல்லப்பிராணி களுக்கான மார்ஸ் நிறுவனத் தின் முன்னணி உணவு பிராண்டுகளின் தொழில்-வணிக செயல்பாடுகளை இந்தியாவில் மனிஷ் இனி வழிநடத்துவார். இதற்கு முன்பு ஹிந்துஸ்தான் யூனிலி வர் மற்றும் ஜிஎஸ்கே போன்ற பெருநிறுவனங்களில் உயர்பதவிகளை வகித்துள்ள இவர், 2024-ல் மார்ஸ் நிறுவனத்தில் தலைமை விற்பனை அதிகாரியாக இணைந்து, இந்தியாவில் மார்ஸ்-ன் பெட் நியூட்ரிஷன் பிரிவின் வளர்ச்சிக்கு முக்கியப் பங் காற்றியுள்ளார். முன்னாள் நிர்வாக இயக்குநர் சலில் மூர்த்தி, தற்போது லண்டனில் உள்ள மார்ஸ் நிறுவனத்தின் சர்வதேசத் தலைமையகத்தில் நிறுவன உருமாற்றத்திற் கான உலகளாவிய துணைத் தலைவர் என்ற உயர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார். மார்ஸ் பெட் நியூட்ரிஷன் பிரிவின் பிராந்தியத் தலைவர் பிரான்சிஸ்கோ பெர்னாண்டஸ் ஆகியோர் உடனிருந்தனர்.

# 50 லட்ச ரூபாய் வேலையை விட்டுவிட்டு மோமோஸ் பிசினஸ் துவக்கிய நபர்

ஹரியானாவில் வசிக்கும் சாகேத் சௌரவ், ஆண்டுக்கு 50 லட்ச ரூபாய் வருமானம் தரும் தனது நிரந்தர வேலையைவிட்டு, 2023 ஆம் ஆண்டு தி மோமோஸ் மாஃபியா என்ற மோமோஸ் விற்பனை நிறுவனத்தைத் துவக்கியுள்ளார்.

இரண்டரை ஆண்டுகளில் தனது நிறுவனம் 5 கோடி ரூபாய்க்கும் அதிக வருவாய் ஈட்டியுள்ளதாக சாகேத் தெரிவிக் கிறார். இன்று இந்தியாவின் ஏழு மாநிலங்களில் அவரது நிறுவனத்திற்கு கிளைகள் செயல்பட்டு வருகின்றன.

சாகேத் அலுவலகத்தில் வேலை செய்யும்போது, தனது சகோதரி மற்றும் அவரது கணவருடன் சேர்ந்து பேம்பூ கபே என்ற சிறிய உணவகத்தைத் துவக்கியார். அங்கு பரோட்டா, பிரியாணி போன்ற பல உணவு வகைகள் தயாரிக்கப்பட்டு விற் பனை செய்யப்பட்டன. அப்போது மோமோஸ் சிறந்த விற்பனை பெற்றதை கவனித்த சாகேத், மோமோஸ் விற்பனை செய்யும் திட்டத்தை உருவாக்கினார்.

மோமோஸ் வியாபாரம் ஆரம்பத்தில் எளிதாக இல்லாமல் இருந்தது. பல பிரச்சினைகளை சந்தித்து, கடைசியில் முதல் ஆண்டில் 16 லட்ச ரூபாய், இரண் டாவது ஆண்டில் 2.2 கோடி, தற்போது மூன்றாவது ஆண்டிலும் 2.2 கோடி ரூபாய் வருவாய் ஈட்டியதாக சாகேத் தெரிவித்தார்.

சிறிய ஆரம்பத்தில் இருந்து வியாபாரத்தை வெற்றியடையச் செய்த அவரது கதையானது இந்தியாவின் இளம் தொழிலாளர்களுக்கு முன்மாதிரி ஆகும்.

# ஜோஸ் பட்லர் புதிய கின்னஸ் சாதனை
# 122 மீட்டர் உயரத்தில் ட்ரோன் பந்தை கேட்ச்



இங்கிலாந்து அணியின் முன்னாள் கேப்டன் மற்றும் விக்கெட் கீப்பர் ஜோஸ் பட்லர் உலகத்தை அதிர்ச்சி அடையவைத்த புதிய கின்னஸ் சாதனை படைத்துள்ளார். தென்னாப்பிரிக்காவின் கேப் டவுனில் நடை பெற்ற சவாலில், தரையி லிருந்து 122 மீட்டர் உயரத்தில் ட்ரோனில் இருந்து வீசப்பட்ட கிரிக்கெட் பந்தை லாவ கமாக கேட்ச் பிடித்தார்.

இந்த அதிரடியான முயற்சியின் வீடியோ சமூக வலைதளங்களில் விரைவாக வைரலாகி பெரும் பிரபலத்தை பெற்றுள்ளது. இதை இங்கிலாந்தின் முன்னாள் நட்சத்திர வீரர் கேவின் பீட்டர்சன் தனது சமூக வலைதளத்தில் பகிர்ந்ததும் ரசிகர் கள் மத்தியில் பெரும் வரவேற்பு கிடைத் துள்ளது.

122 மீட்டர் உயரம் என்பது டெல்லியில் உள்ள குத்துப் மினார் உயரத்தை விட மூன்று மடங்கு அதிகம் என்பதால், இந்த சாதனையின் வியப்பை மேலும் உயர்த்துகிறது. முன்பு 2021 ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய விக்கெட் கீப்பர் 119.86 மீட்டர் உயரத்தில் கேட்ச் பிடித்திருந்தார்.

இப்போது பட்லர் அந்த சாதனையை முறியடித்தார் மற்றும் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித் துள்ளார். அவரது அபார திறமைக்கு ரசிகர்கள் மட்டுமல்லாமல் முன்னாள் வீரர்கள், வர்ணனையாளர்களும் பாராட்டுமழைபொழித்து வருகின்றனர்.

# ‘பென்’ மீடியா கொடுத்த அழுத்தம்
# பெண்கள் வங்கிக் கணக்கில் 5 ஆயிரம் விழுந்தது இப்படிதான்

தி கோவை ஹெரால்டு

தி.மு.கவுக்கு ஆதரவாக வியூகம் வகுத்துவரும் பென் மீடியா நிறுவனம் இரண்டாயிரம் ரூபாய் உயர்த்தும் அறிவிப்பு ஒருபுறம் இருக்கட்டும், பெண்களுக்கு கணிசமான ஒரு தொகையை தேர்தலுக்கு முன்பாக கொடுத்துவிட வேண்டும் என்று முதல்வர் அலுவலகத்திற்கு அழுத்தம் கொடுத்து வந்தது.

பீகார் தேர்தலில் பா.ஜ.க கூட்டணி வெற்றிக்கு அந்த மாநில பெண்களின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்ட 10 ஆயிரம் ரூபாய் பெரும் பங்கு வகித்தது. அதே பாணியை தி.மு.கவும் கையில் எடுக்க வேண்டும் என பென் நிறுவனம் திட்டத்தை வகுத்துக் கொடுத்தது.

இதையடுத்து, ரகசியமாக வைத்திருந்து, இந்த தொகையை 13ம் தேதி காலையிலேயே பெண்கள் வங்கிக் கணக்கில் வந்து விழும் வகையில் செய்து விட்டனர்.

இல்லையென்றால், நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற வாய்ப்புள்ளதால், இந்த திட்டத்தை ரகசியமாக வைத்திருந்து அமல்படுத்தியுள்ளனர். திமுக அரசின் இந்த செயலை எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்துள்ளன.









### ‘ஐந்து ஆயிரம்’ கொடுப்பதா? –இபிஎஸ்

“தேர்தல் தோல்வி பயம், பொம்மை முதல்வரை என்னவெல்லாம் செய்ய வைக்கிறது என்று பார்த்தீர்களா?

28 மாதங்களாக “1000 ரூபாய்” கொடுக்காமல் இழுத்து அடித்த ஸ்டாலின், தற்போது மூன்று மாதத் தொகையோடு சேர்த்து “கோடைக்கால சிறப்புத் தொகை” கொடுக்கிறாராம்.

2024, 2025 ஆண்டுகளில் நமக்கு கோடைக்காலமே வரவில்லையா ... செப் 2023 முதல் இதுவரை உங்கள் அரசு கொடுத்த தொகை ரூ. 34,000 ஆனால், உங்கள் ஆட்சியால் ஒவ்வொரு குடும்பமும் இழந்த குறைந்தபட்சத் தொகையே “ரூ.3,50,000”! இதை விடியா ஆட்சி வீட்டு பில்லே சாட்சி என்று வீடு வீடாக சென்று அதிமுக அம்பலப் படுத்தி வருவதைக் கண்ட பயத்தில் வருவது தானே இந்த அறிவிப்பு? தமிழக மக்களின் பேராதரவுடன் இன்னும் மூன்று மாதங்களுக்குள் அமையவுள்ள அதிமுக ஆட்சியில், தமிழகப் பெண்களுக்கு “குல விளக்குத் திட்டம்” மூலம் அனைத்து குடும்பத் தலைவிக்கும் “மாதம் ரூ.2000” என்று நான் அளித்த வாக்குறுதியானது, கழக ஆட்சி அமைந்தவுடன் அமல்படுத்தப்படும். ‘ஐந்து ஆயிரம்”

### 5 ஆயிரம் கொடுக்க நான்தான் காரணம் –நடிகர் விஜய்

“ வழக்கமாக மாதந்தோறும் 15ஆம் தேதி வரவு வைக்கப்படும் மகளிர் உரிமைத் தொகை, குறிப்பாக இன்று 13ஆம் தேதி வரவு வைக்கப்பட்டு அறிவிக்கப்படுவது ஏன்?.

தி.மு.க. தனக்குப் போட்டியாகக் கருதுவதும் தன்னை வெல்லப் போகும் ஒரே மக்கள் சக்தி எனக் கருதுவதும் த.வெ.க.வைத் தான் என்பதை இந்த அறிவிப்பின் மூலம் தமிழகத்தின் தற்போதைய முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் உறுதி செய்துள்ளார்.

எனவே, என்னருமைத் தாய்மார்களே, அக்கா, தங்கைகளே, உங்கள் மகன், உங்கள் அண்ணன், உங்கள் தம்பி விஜயின் அரசியல் வருகையின் தாக்கத்தால் கிடைத்த இந்தத் உரிமைத் தொகையைச் சந்தோசமாக வாங்கிக்கொள்ளுங்கள்.”

குடும்பத்தை சிதைத்து விட்டு பெண்களுக்கு பணமா? - தமிழிசை

‘‘ குடிக்கும் பழக்கம் உள்ள நபரால் தமிழ்நாட்டில் ஒரு குடும்பம் 6 ஆயிரம் ரூபாய். டாஸ்மாக்கிற்காக செலவழிக்கிறது என்கிறது என்கிறது ஆய்வு.

டாஸ்மாக் மூலமாக ஆண்டுக்கு 45,000 கோடியை இந்த அரசாங்கம் சம்பாதிக்கிறது.. ஆக குடும்பங்களை குலைத்துவிட்டு குடும்பப் பெண்களுக்கு பணம் கொடுக்கிறேன் என்று சொல்கிறது இந்த அரசு.

### பணத்தை கொடுத்து கொள்ளையடிக்க துடிக்கிறது – சீமான்

5000 ரூபாய் கொடுத்து அடுத்த 5 ஆண்டுகள் தமிழ்நாட்டைக் கொள்ளையடிக்கத் துடிக்கிறது திமுக அரசு; பணத்தைக் கொடுத்து வாக்கைப் பறிக்க முனையும் திமுகவின் திருட்டுத்தனத்திற்கு வரும் தேர்தலில் மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்!

### முழு மனதுடன் வரவேற்கிறேன் –கார்த்தி சிதம்பரம்

இதை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன். நேரடி பணப் பரிமாற்றம் என்பது உலகளாவிய அடிப்படை வருமானம் போன்றது. இந்த பணம் உள்ளூர் பகுதிகளிலும், அதைச் சுற்றியும் செலவிடப்படுகிறது. இது உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்த சிறந்த வழியாகும்.”

### பாஜக, அதிமுக திட்டத்தை முதல்வர் முறியடித்துள்ளார் – ஜோதிமணி

“பெண்கள் கையில் கொடுக்கப் படுகிற ஒவ்வொரு ரூபாயும் மிகுந்த பொறுப்போடும், கவனத்தோடும் செலவிடப்படும். வீட்டுக்கும், நாட்டிற்கும் பயன்படும். மகளிர் உரிமைத் தொகை அடுத்த இரண்டு மாதங்களுக்கு நமது சகோதரிகள் கையில் கிடைக்கக்கூடாது என்று சதி செய்த பாஜக அதிமுக கூட்டணியின் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் ஸ்டாலின் வெற்றிகரமாக முறியடித்துள்ளார்கள்.”

# கோவை குண்டு வெடிப்பில் நூலிழையில் உயிர் தப்பினேன்
## குடியரசு துணை தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன்

கோவை மாநகரையே உலுக்கிய 1998-ம் ஆண்டு தொடர் குண்டுவெடிப்பு சம்பவத்தின் 28-ம் ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்படுகிறது. உயிரிழந்த 58 அப்பாவி மக்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டி, பேரூர் நொய்யல் படித்துறையில் விஸ்வ இந்து பரிஷத்தின் தர்ம யாத்திரா அமைப்பு சார்பில் பிப்ரவரி 14 அஞ்சலி செலுத்தப்பட்டது.

கோவை குண்டு வெடிப்பில் நூலிழையில் உயிர் தப்பினேன் என்று குடியரசு துணை தலைவர் சி.பி.ராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் பதிவில்,



“14 பிப்ரவரி 1998 அன்று கோயம்புத்தூரில் நடைபெற்ற தொடர் குண்டுவெடிப்புகளில் உயிரிழந்த அப்பாவி மக்களை இந்நாளில் கனத்த மனதுடன் நினைவுகூர்ந்து எனது ஆழ்ந்த அஞ்சலியை செலுத்துகிறேன். அது நம் தேசத்தின் வரலாற்றில் மறக்க முடியாத, இருண்ட பக்கமாகும்.

அன்று, எல்.கே. அத்வானி அவர்கள் வந்திருந்த வேளையில் நிகழ்ந்த இந்த கொடூர குண்டுவெடிப்புகள், பல குடும்பங்களின் வாழ்வில் ஆறாத காயங்களை ஏற்படுத்தி, நம் நாட்டின் மனசாட்சியையே உலுக்கியது. அந்த நாளின் பயமும் பதற்றமும் நிறைந்த சூழ்நிலை இன்றும் என் நினைவில் ஆறாத வடுவாகப் பதிந்துள்ளது.

அந்த குண்டு வெடிப்புகளில் ஒன்றில் அன்று நான் மயிரிழையில் உயிர் தப்பினேன். குற்றுயிரும் குலையுயிருமாய் கிடந்தவர்களை மருத்துவமனைகளில் சேர்த்து காக்க போராடிய அந்த கொடிய நிமிடங்கள் என் வாழ்வின் துயரம் மிகுந்த காலங்கள்.

இந்நாளில் உயிரிழந்த ஒவ்வொரு ஆன்மாவையும் பணிவுடன் நினைவுகூர்ந்து, துயரத்தில் வாழும் குடும்பங்களுடன் ஒருமித்த உணர்வில் நின்று அவர்களது துயரங்களில் பங்கெடுத்துக் கொள்கிறேன்.

இந்நாளில், அனைவரும் பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் ஒன்றுபட்டு நின்று, அமைதி, ஒற்றுமை மற்றும் தேசிய ஒருமைப்பாட்டை காக்கும் வகையில் உறுதி எடுத்துக்கொள்வோம்” என தெரிவித்துள்ளார்.

# செயற்கை நுண்ணறிவு வேலைவாய்ப்பு சந்தையில் மாற்றம் ஏற்படுத்தும்: முஸ்தபா சுலைமான்

செயற்கை நுண்ணறிவு உலகில் தொடர்ச்சியான முன்னேற்றம் நடந்து கொண்டுள்ளது. மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் ஏஐ பிரிவு தலைவர் முஸ்தபா சுலைமான் அடுத்த ஒரு ஆண்டில் ஏஐ தொழில்நுட்பம் வேலைவாய்ப்பு சந்தையில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என தெரிவித்துள்ளார்.

அவரது கருத்துக்களின்படி, அடுத்த 12 முதல் 18 மாதங்களில், ஒயிட் காலர் வேலைகள், சட்டம், கணக்கியல், மார்க்கெட்டிங், திட்ட மேலாண்மை போன்ற துறைகளில் உள்ள தினசரி பணிகள் ஏஐ கருவிகள் தானாகவே செய்யக்கூடும். இதனால் வேலைவாய்ப்பு சந்தையில் பெரிய மாற்றங்கள் நிகழும் என தொழில்நுட்ப மற்றும் வர்த்தக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏஐ தொழில்நுட்பம் மனிதர்களால் செய்யப்படும் பல பணிகளை வேகமாகவும் துல்லியமாகவும் செய்யக்கூடிய திறன் பெற்றுள்ளது. இதனால், தொழில்நுட்ப வளர்ச்சியுடன் ஒவ்வொரு பணியாளரும் புதிய திறமைகளை கற்றுக்கொண்டு மாற்றங்களை எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும் என ஆலோசனையாளர்கள் அறிவுறுத்துகின்றனர்.

இந்த முன்னெச்சரிக்கை, ஏஐ வளர்ச்சியின் வேகம் மற்றும் சமூக மற்றும் தொழில்துறை துறைகளில் ஏற்படக்கூடிய மாற்றங்களை முன்கூட்டியே சிந்திக்க உதவுகிறது.

# அடுக்குமாடி குடியிருப்பு சங்கங்கத்தினர் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியிடம் கோரிக்கை

கோவையில் அடுக்கு மாடி குடியிருப்பு சங்கங்களின் கூட்டமைப்பின் இரண்டாவது ஆண்டு பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. இதில் தமிழக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, திமுக கோவை மாநகர் மாவட்ட பொறுப்பாளர் துரை செந்தமிழ்செல்வன், மேற்கு மண்டல பொறுப்பாளர் ரவி, மாநில இளைஞர் அணி செயலாளர் ராஜீவ் காந்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



கூட்டத்தில், அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிப்பவர்கள் வீட்டு வரி, குப்பை வரி மற்றும் குடிநீர் டெபாசிட் செலுத்தியும், மாநகராட்சி வழங்கும் அடிப்படை வசதிகள் முறையாக கிடைப்பதில்லை என தெரிவிக்கப்பட்டது. குப்பை அகற்றும் சேவை தாமதமாக நடைபெறுதல், குடிநீர் இணைப்புகள் போதாமை, அதிக மின்கட்டணம் மற்றும் பராமரிப்பு சுமைகள் குறித்து புகார் முன்வைக்கப்பட்டது.

# அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிய அமைச்சர் மா.சுப்பிரமணியன்



பொள்ளாச்சி அரசு மேல்நிலை பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாமை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் பார்வையிட்டு, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அருகில் பொள்ளாச்சி சார் ஆட்சியர் ராமகிருஷ்ணசாமி, மாநில தூய்மை பணியாளர் வாரிய தலைவர் திப்பம்பட்டி ஆறுசாமி, மாவட்ட சுகாதார அலுவலர் பாலுசாமி, பொள்ளாச்சி நகராட்சி தலைவர் ஷியாமளா நவநீதகிருஷ்ணன்.




Published by S.Kamalakannan Printed by S.Prabhakaran on behalf of Senthur Printers. Printed at Door No.7, Lakshmi Nagar, 2nd Street, Nallampalayam Road, New Sanganoor, Rathinapuri (Po), Coimbatore – 641027. Published from 27, Vinayagar Koil Street, Krishnaswamy Nagar, Ramanathapuram, Coimbatore – 641045. Editor K.Abirami. (Note: All the litigations aur within the jurisdiction of Coimbatore courts only.)